Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம்
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம்
★
நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு 20-3-1948 சனிக்கிழமை { மலர் 28.

# சட்டை போடாதே!

["வாணிதாசன்"]

★

கட்டிற்குத் தடைப்படுமோ சீறிப் பாய்ந்து
கரையுடைக்கும் பெருவெள்ளம்; கொள்கைக் காகக்
குட்டுண்டு குட்டுண்டு சிலர்சாய்ந் தாலும்
கொள்கையெங்கும் சாய்ந்ததில்லை; உலகைப் பாரீர்!
சட்டைக்குத் தடைசெய்தீர்; ஆளவந் தீர்!
தலைமுடிப்புக் கினித்தடையும் செய்வீர் போலும்!
கட்டுண்டு வாழ்ந்தமகள் மாமி யாகக்
காட்டுகின்ற மனப்பான்மை வேண்டாம்! வேண்டாம்!

வந்ததின்று வாழ்வெனவே செல்லோர் முன்னர்
வாழ்ந்தநிலை மறந்திடுவர்; அதுகூ டாது!
புந்தியினில் நிலைத்திருக்கும் நல்ல கொள்கை
போடாதே சட்டையெனில் அற்றுப் போமா?
இந்தியினைத் திராவிடத்தில் நுழைத்துப் பார்க்க,
எழுந்தபெருங் கூட்டத்தை மறந்தா போனீர்!
எந்தநிலை வந்தாலும் எதிர்த்துத் தாங்க
ஈரோட்டுக் கிழமுண்டு; தூள் தூள் சட்டம்!

செல்லரித்த சுவடியினை மானும் எங்கள்
சீர்கெட்ட திராவிடத்தைத் திருத்தல் தப்பா?
செல்வத்தைப் பறித்தோடும் வடவர்த் தள்ளித்
திராவிடத்தில் தனியரசு கேட்டல் தப்பா?
புல்லறுக்கப் பலகிளைகள் கிளைக்கக் கண்டும்
போடாதே சட்டையென்றீர்; திராவி டத்தில்
நல்லிளைஞன் ஒருவனுயிர் உள்ள மட்டும்
நாடாள்வீர்! பகற்கனவே உமது நோக்கம்.

பெண்கள் பகுதி:

# குலமங்கையர் கோவிலுக்குப் போகலாமா?

(தோழியர் இந்திரா)

★

வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளிகள் வேண்டப்படுகிற நாட்டில், வீதிகள் தோறும் கோயில்கள் இருக்கத்தவறவில்லை. ஏன் வீடுகளிலேயே இருக்கிறது. தன் பொறுப்பனைத்தையும் ஏதோ பொறுப்பற்ற தெய்வத்திடம், ஒப்படைத்து விட்டு 'சிந்தம் போக்கு சிவம் போக்கு' என இருக்கும் இந்த நாட்டில் பெண்கள் நிலை மிகத் தாழ்ந்திருக்கிறது. தாழ்ந்த நிலை உடனடியாக மாறியாக வேண்டும் எனக் கூறப்படுகிறது. அதற்கான முயற்சிகளோ நடைபெறக்காணோம். ஆண்களிடம் உள்ள பக்தியை—மூடபக்தியை விட்ப் பெண்கள் அதிகம் பெற்றிருக்கக் காரணம், பெண்கள் படிப்பற்று, எழுத்து வாசனையற்று, இடது கைப் பெருவிரல் ரேகை வைக்கும் நிலைமையிலிருப்பதால்! அல்லவா? படிப்புத் தேவை தான் பெண்ணினத்துக்கு. அதற்காகக் காய் அரிய, சோறு சமைக்கப் படிப்புத் தேவையில்லை அல்லவா? அதே போல, கடவுளை ஏன் கும்பிட வேண்டும்? கும்பிடுவதற்கு அந்த அய்யனுக்கு, ஏன் பணங்காசு தருதல் வேண்டும்? தெய்வத்தின் பட்டியலில், திருவிளையாடல்கள் பல புரிந்து பெண்களிடம், மிருகத்தனமாக நடந்து கொண்ட காலிகள் பலர் எப்படிச் சேர்ந்தனர் என்பதுபற்றிச் சிந்திக்க அறிவு சிறிது கூட இல்லாமல் போகாது! சிந்திக்கத் தூண்டுதல் வேண்டும்!

கற்பு என்பது, செயலில் இதுவரை யாராலும் காட்டப்படாதிருக்கிற—இன்னுங் கூறவேண்டுமானால் செயல் முறைக்குச் சிறிதும் ஒவ்வாத-ஒன்று. அதற்காகக் கண் சிமிட்டி, சிரித்து, பெண் வர்க்கத்தை இழிவுபடுத்த வேண்டியது இல்லை. கற்புடையவள் என்று கருதுகிற, கற்பரசி என்று கருதுகிற ஒருத்தி, கணவனல்லாத ஒரு ஆணை, சிலையை ஏன் தொழ வேண்டும்? தன் கணவனைவிட, மற்றொரு ஆணுக்கு உள்ளத்தில் உயர்ந்த இடம் தருகிற ஒருத்தி கற்புடையவள் என்று கூற எப்படி முடியும். இது ஒழுங்கா? கணவனல்லாத ஒரு காமாந்தகாரனைத் தொழுகிறவள் பாஞ்சாலியே ஒழிய கண்ணகியாக முடியாது! ஓ! பாஞ்சாலிகளே, உங்களுக்குப் பெயர் கற்பரசிகளா!!

இன்றையக்கோவில்கள் கோவில்களாக இல்லை. ஆலயங்களாக இல்லை. மக்கள் நடமாடுகிற இடமாக இல்லை. தூய்மை ஒழுக்கம், அன்பு, இவற்றின் அடிப்படையாக இல்லை. அது மக்களுக்கு முன் மதிப்பாக நடத்தப்படும், விபசாரக்கோட்டை. பெண்களை விலைகூறும் சந்தைதான் இன்றையக்கோவில்கள். கடவுளைக் காண்பித்து, பெண்களை அழைத்து தரம் நிர்ணயிக்கப்படும் இடம் அது. இன்றைய ஆலயங்களில் பெண்கள் நடமாட்டம் குறைந்தால் அங்கு ஒருவரும் போகவே மாட்டார்கள். போகாதது மட்டுமல்ல, தூற்றவும் செய்வார்கள். பெண்களின் மூடப்போக்கினால் தான் இன்றையக் கோவில் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைய ஆயிரக்கால் மண்டபங்கள் கூறுமே இன்றையக் கோவில்களில் நடந்த திருவிளையாடல்களைப்பற்றி, அந்தக் குருக்களைப் பற்றி, கண்ணன் கோவிலுக்குப் போகிற மனிதன் ஒவ்வொருவனும் கண்ணனாகிற கதைகளைப் பற்றி, பாஞ்சாலியை வணங்குகிற பெண்கள் பாஞ்சாலி ஆன விதத்தை ஆக்கப்பட்ட விதத்தைப்பற்றி, கோயிலுக்குக் கூட்டம் வருகிற காரணத்தைப்பற்றி.


தோழியரே! நீங்கள் கோவிலுக்குப் போகாதீர்கள். பகட்டாக நீங்கள் பட்டுடைஉடுத்திக்கொண்டு போகாதீர்கள். போகிறவர்களை அழைத்துக் கேள்விகளைக்கேளுங்கள். அவர்களையும் உங்கள் வழிக்குக் கொண்டு வாருங்கள். பரந்தாமனைக் காணச்செல்ல பட்டுடைகள் ஏன்? என்று கேளுங்கள். கோவிலுக்குச் செல்லும் போது மட்டும், மணப்பெண் மாதிரி, ஏன் அலங்கரிக்க வேண்டும்? என்று கேளுங்கள். கடவுள் பற்றில்லாத வாலிபரும் அலங்கரித்துக் கொண்டு வருவதையும் சுட்டிக் காண்பித்துக் கேளுங்கள். இத்தனை ஆண்டுகளாகப் போய் என்ன பெற்றீர்கள்? என்று கேளுங்கள். போகாத நாங்கள் என்ன இழந்து விட்டோம்? என்று கேளுங்கள். குருக்களுக்குத் தட்சணை, எதற்கழுவது? என்று கேளுங்கள். கொடுத்த தட்சணையை என்ன செய்கிறார்கள்? என்று கேளுங்கள். மற்ற மலர்களுக்கும் அந்தக் கற்சிலைக்குப் போட்டு எடுத்த மலருக்கும் என்ன வித்தியாசம் கண்டீர்கள்? என்று கேளுங்கள். கடைக் குங்குமத்திற்கும், அந்தக் கற்சிலையிலிருந்து சுரண்டிய குங்குமத்திற்கும் என்ன மாறுபாடு? என்று கேளுங்கள். அங்கு வருகிற வாலிபர்கள், சிலையைப் பார்க்கிறார்களா, சிங்காரிகளைப் பார்க்கிறார்களா? என்று கேளுங்கள். கேள்விகளுக்கு மேல் கேள்வி கேட்டு, குலமங்கையர் கோவிலுக்குப் போகலாமா? என்று அவர்களை அவர்களே கேட்டுக் கொள்ளச் செய்யுங்கள்.........—பிறகு அந்தச் சிலைகள் கண்காட்சி சாலைக்கு வந்து விடும்.

## இரண்டு பணிகள்!

★

பன்னெடுங் காலமாகவே அறிவீனர்களாக ஆக்கி வைக்கப்பட்டிருக்கும் திராவிட மக்களுக்கு சிந்தனை அறிவை உண்டாக்கி வைப்பது தான் திராவிட கழகத்தின் முதல் பணி. திராவிடர்களின் இழி தன்மையைச் சூத்திரத்தன்மையைப் போக்குவதுதான் அதனுடைய இரண்டாவது முக்கிய பணியாகும்.

—பெரியார்.




## காட்சி 26.

சீதையின் அந்தப்புரம். சீதை ஒரு சிறு விக்கிரகம் வைத்து, ராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆக வேண்டும்; அதற்கு எந்தவிதத் தடையும் ஏற்படக்கூடாது என்று பிரார்த்தனையுடன் பூஜை செய்து கொண்டிருக்கிறாள். இராமன் துக்கத்தோடு தலையைத் தொங்க விட்டுக் கொண்டு பிரவேசிக்கின்றான்.

பிரவேசித்த இராமன் சீதைமுன் துக்கத்தோடு பேச முடியாமல் நிற்கிறான்.


சீதை:— இராமனைப் பார்த்துத் திடுக்கிட்டெழுந்து, கவலைப்பட்ட முகத்துடன் கையைப் பிசைந்து கொண்டு, இராமனைப் பார்த்த வண்ணம் நின்று யோசிக்கிறாள்.

இராமன்:— பெரு மூச்சுடன் தலையைத் தூக்கிச் சீதையைப் பார்த்துக் கண்ணீர் விடுகின்றான்.

சீதை:— (மிகத் துக்கத்தோடு) நாதா! என்ன இது! உங்கள் பட்டாபிஷேக தினமல்லவா இது! இந்த நாளில் இப்படித் துக்கப்படுவது ஏன்? பட்டாபிஷேகத்துக்கு நிச்சயித்த இந்நாள் புஷ்ய நட்சத்திர நாளல்லவா? இன்று உலகமே மகிழும்படியான நாள் என்றல்லவா வதிஸ்டர் முதல், மகாசிரேஷ்டர்களான மகான்கள் எல்லாம் முகூர்த்தம் வைத்துக் கொடுத்தார்கள். இப்போது தாங்களும் நானும் நல்ல ஆடை ஆபரணாதிகளை அலங்கரித்துக்கொண்டு, அபிஷேக மண்டபத்துக்குச் செல்லவேண்டிய நேரம் ஆயிற்றே! தாங்கள் இந்தக் கோலத்தில் இருப்பது எனக்குப் புரியவில்லை! அபிஷேகத்துக்கு என்று ஜோசியர்கள் வைத்துக் கொடுத்த நேரம், எப்படித் துக்கப்படக் கூடிய நேரம் ஆகும்! [என்று யோசிக்கிறாள்]

இராமன்:— சீதே! இந்த நல்ல அருமையான முகூர்த்த நாளில் தான், என் தந்தை எனக்குப் பட்டாபிஷேகம் செய்யாமல் என்னையழைத்து, "இராமா உனக்குப் பட்டாபிஷேகம் இல்லை; இந்த நாடு பரதனுக்குச் சொந்தம், அவனுக்குத்தான் பட்டம் ஆகவேண்டும், நீ காட்டிற்குப்போ! பதினாலு வருஷ காலம் நீ அங்கு வசிக்கவேண்டும்" என்று சொல்லி விட்டார். என் தலை விதி எனக்கு இப்படி நேர்ந்தது. நாடாளப் பட்டம் சூட்டிக் கொள்ள நாள் பார்த்து ஏற்பாடு செய்யப்பட்ட முகூர்த்த நேரமானது, என்னைக் காட்டிற்குப் போகச் செய்யும் நேரமாகி விட்டது. (என்று சொல்லித் தலையிலடித்துக்கொண்டு அடங்காத் துக்கப்படுகிறான்)

சீதை:— (துடிதுடித்து ஆச்சரியக்குறியோடுபேயாவேசமாய்) நாதா! இது என்ன கனவுலகமா? நினைவுலகமா? நீங்கள் சொல்வதுஎன்ன? என் உள்ளத்தில் நெருப்பை யள்ளிக் கொட்டியதுபோல் உள்ளம் துடிக்கிறதே ஒழிய ஒன்றும் புரியவில்லையே! விஷயம் என்ன? ஏன் இப்படி ஏற்பட்டது?




இராமன்:— (ஒரு விதமாகத் தன்னைத் தேற்றிக்கொண்டு) என் உயிருக்குச் சமானமானவளும், அன்பிற்குப் பாத்திரமானவளுமான சீதாய்! நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்! நான் சொல்லுகிறபடி நட! எல்லாக் காரியமும் நமக்குக் கைகூடும்!

சீதை:— (முகத்தெளிவுகொண்டவளாய்) சொல்லுங்கள் நாதா! தங்கள் கட்டளைப்படியே நடப்பேன்! தவறமாட்டேன்!

இராமன்:— ஓ! என்னாருயிர்க் காதலியாகிய சீதையே! இன்று என் பட்டாபிஷேகம் நின்றுபோனதிலும், நான் காட்டுக்குப்போகப்போவதிலும் ஒன்றும் ஆச்சரியமில்லை. நல்ல முகூர்த்த நேரம் என்பதும் ஒன்றும் தவறிவிடவில்லை, நாம் மாத்திரம் தந்திரமாக நடந்தால் இராஜ்ஜியத்தையடைந்து விடலாம்! சொல்லுகிறேன் கேட்பாயாக! சீதையே! முதலாவதாக ஒன்று சொல்லுகிறேன். கவனமாய்க் கேள்! அதாவது பட்டாபிஷேகத்திற்காக நாள் பார்த்தது என்பது ஜோஸ்ய சாஸ்திரங்களைப் பார்த்து ரிஷிகள், நிபுணர்கள் பார்த்து வைத்ததல்ல. அது என் தகப்பனார் வைத்த நாள் ஆகும்.

சீதை:— அப்படியா? அவர் எப்படி நாள் பார்த்தார்? ஏன் பார்த்தார்?

இராமன்:— என் தகப்பனார் வதிஸ்ட மகரிஷியுடனும் மற்றும் சாஸ்திர நிபுணர்களுடனும் பட்டாபிஷேகத்தைப் பற்றிச் சொல்லும் போதே "பரதன் இங்கு இல்லாத நாள்தான் பட்டாபிஷேகத்திற்கு ஏற்றநாள். அவன் சீக்கிரம் வந்துவிடுவான். ஆகையால் நாளையே நாள்வையுங்கள்" என்று சொல்லிவிட்டார். அதன் படியே வதிஸ்டமகரிஷியும் சம்மதித்து நாள் வைத்து விட்டார். என்தந்தையார் என்னிடமும் அப்படியே தான் சொன்னார். எப்படியென்றால் "இராமா! நாளைக்கே உனக்குப் பட்டாபிஷேகம் செய்யப் போகிறேன். இனிக் காலதாமதம் செய்தால் பரதன் வந்துவிடுவான். அவன் வந்து விட்டால் உனது பட்டாபிஷேகம் நடக்காமல் போய்விடும். நடந்த பிறகு அவன் வந்தால் "நடந்து விட்ட காரியத்தை ஆட்சேபிக்கக் கூடாது" என்று பொறுத்துக் கொள்ளக் கூடும். அவன் மிக நல்லவன். சூதுவாது அறியாதவன். நான் இதை மிக இரகசியமாக நடத்துகிறேன், அதனால் தான் இதை

நாளையேவைத்துக் கொண்டேன். நீ பட்டாபிஷேகம் நடக்கும் வரையில் ஜாக்கிரதையாக இரு! உன் மாமனாராகிய ஜனக மகாராஜாவுக்கும் எனது மாமனாராகிய கேகய மகாராஜாவுக்கும்கூட இச்சங்கதியை நான் தெரிவிக்கவில்லை. அவர்களுக்குத் தெரிந்தால் இது நடைபெறாது. ஆதலால் இதை நீ அந்நியர் யாருக்கும் சொல்ல வேண்டாம். காரியம் நடக்கும் வரை உன்னை நீ ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்! உன் ஸ்நேகிதர்களுக்கு மாத்திரம் தெரியட்டும்! அவர்களை உன்னைச் சுற்றிலும் உனக்குப் பாதுகாவலர்களாக இருக்கச் செய்'' என்று சொல்லித்தான் இதைத் துவக்கினார்.

சீதை:— (ஆச்சரியக் குறிப்புடன்) என்ன இது? இது ஒரு பெரிய மயக்கத்தைக் கொடுக்கக் கூடிய சேதியாக இருக்கிறதே! தங்களுக்குத் தங்கள் தகப்பனார் செய்யும் பட்டாபிஷேகத்திற்கு இத்தனை ஒளிவு மறைவு இரகசியம் ஏன்? பரதன் உங்கள் தம்பிதானே. அவனுக்காக இவ்வளவு பயப்படுவானேன்? நீங்கள் பட்டமகிஷி மகன் என்பதோடு சிரேஷ்ட புத்திரனுமாவீர்! என்னைப்போல் நீங்கள் என்ன தாய் தகப்பன் இன்னாரென்று அறிய முடியாத பிள்ளையா? அல்லது உங்கள் தகப்பனாருக்கு நீங்கள் என்ன வைப்பாட்டி மகனா? எனக்குத் தாங்கள் சொல்வதிலிருந்து புத்தி எப்படி எப்படியோ, எங்கு எங்கோ போகிறதே! இந்தப் பட்டாபிஷேகம் என் தகப்பனாருக்கும், பரதன் பாட்டன், மாமன் முதலியோருக்கும், தங்கள்மீது மிகவும் அன்பும் உயிர் போன்ற ஆசையுமுள்ள உங்கள் சிற்றன்னை கைகேயி அம்மாளுக்கும்கூடத் தெரிவிக்கப்படாமல் ஏற்பாடு செய்யப்பட்டது என்றால், இது மகா ஆச்சரியமாகவும் மகா மூடுமந்திரமாகவும் இருக்கிறதே! இதில் ஏதோ இரகசியம், அதுவும் திருட்டுத்தனமான துரோகமான சூழ்ச்சி இரகசியம் இருக்க வேண்டும். அதைச் சற்று விளக்குங்கள். என் மனம் அதை அறியத் துடிக்கின்றது. நாதா! நாதா! சற்று சொல்லுங்கள்!

இராமன்:— சீதாய்! நீ ஊகிப்பது நிஜம்தான். இதில் பல சூழ்ச்சிகள் இருக்கின்றன என்பதும் மெய்தான். அவற்றைச் சொல்லுகிறேன். கேள்! நான் அரசனுக்குப் பட்ட மகிஷியின் புத்திரன் என்பதிலும், சிரேஷ்ட (மூத்த) புத்திரன் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் நமது அரசர் பரதனின் தாயாரான கைகேயியை மூணாந்தாரமாக மணக்க வேண்டுமென்று ஆசை கொண்டார். ஏனென்றால் அந்தம்மாள் மகா சுந்தரவதி. உலகில் உள்ள பெண்களிலெல்லாம் மிக அழகியவள். மிக்க குணவதி. அந்தச் சமயத்தில் என் தாயார் மிகக் கிழப் பருவம் அடைந்தவர்களாய் இருந்தார்கள். ஆதலால் அரசர்கைகேயியின் குணத்தையும் அழகையும் கேள்விப்பட்டுக் கேகய மன்னனிடம் சென்று பெண் கேட்டார். கேகய மன்னன் கிழவனுக்குப் பெண் கொடுக்கவும், அதுவும் மூணாந்தாரமாய்க் கொடுக்கவும் சம்மதிக்காமல் மறுத்து விட்டார். பிறகு என் தந்தையார் இந்தக் குறைகளுக்குப் பரிகாரமாகத் தனது இராஜ்ஜியத்தைக் கைகேயிக்கே கொடுத்துவிடுவதாகவும், அதைக் கைகேயி தனது மகனுக்குப் பட்டம் கட்டிக் கொள்ளத்தான் சம்மதிப்பதாகவும் கூறி, அன்றே சுல்கமாக இராஜ்ஜியத்தைக் கைகேயிக்கு ஒப்புவித்து, அந்தம்மாளுக்காகத்தான் ஆளுவதாகச் சொல்லி ஒப்புக் கொண்டு கைகேயியைத் திருமணம் செய்து கொண்டார். அதனால் இந்த நாடு கைகேயிக்கும், பரதனுக்கும் சொந்தமானதாக இருந்து வருகிறது. இதனால் எனது தந்தையார் பரதனுக்கும், பரதன் பாட்டனார் மாமன் முதலியவர்களுக்கும், பரதன் தாய் கைகேயி அம்மைக்கும் தெரியாமலும், பரதன் வருவதற்கு முன்னாலுமாகப் பட்டாபிஷேகத்தைத் திடீர் என்று நினைத்து ஒருவருக்கும் தெரியாமல், நினைத்த மறுநாளே பட்டாபிஷேக முகூர்த்தம் வைத்துக் கொண்டார். இந்தப் பட்டாபிஷேகத்தை உன் தந்தை ஜனக மகாராஜாவுக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்று நீ கேட்கக்கூடும். ஏன் தெரிவிக்கவில்லை என்றால், உன் தகப்பனாருக்குத் தெரிவிப்பதாய் இருந்தால் கைகேயியின் தகப்பனாருக்கும்தெரிவிக்கவேண்டி வரும். அப்படித் தெரிவிக்காவிட்டாலும் கூட உன் தகப்பனாருக்கு இப்படி மகாராஜா பட்டாபிஷேகத்தை இவ்வளவு இரகசியமாய் நடத்துவது பற்றி அதிருப்தி ஏற்படக்கூடும். இவை எல்லாம் இல்லாவிட்டாலும் அவரும் வந்திருக்கிற சமயத்தில், இப்படிப்பட்ட தடையான காரியங்களும், சூழ்ச்சி வெளியாகும் காரியங்களும் நடந்து விட்டால் அதை அவர் சகிக்கமாட்டார். என் தகப்பனார் மீது மிகுந்தகோபமும் அசிங்கமும் கொள்வார். ஆனதால் இரகசியமாகக் காரியம் செய்ய வேண்டி வந்தது. இது வெளியாகி விட்டது. இதனால் இந்தக் கதி ஏற்பட்டது. ஆதலால்தான் இதில் ஆச்சரியப்படத்தக்கது ஒன்றுமில்லை யென்றேன்.

சீதை:— அப்படியா சங்கதி! தாங்களும் தங்கள் தகப்பனாரும் மிகச் சாமர்த்தியமாய் நல்ல வேலை செய்திருக்கிறீர்களே! இதற்கு வசிஸ்டர் எப்படி ஒப்புக் கொண்டார்?

இராமன்:— என் தகப்பனார் இஷ்டப்படி கேட்டு நடப்பவர்தானே நமது குரு வசிஸ்டர். அன்றியும் அவருக்கும் இந்தத் தந்திர ஏற்பாடுகள் எல்லாம் தெரியும். அவரும் தான் இந்த முயற்சியில் பங்கெடுத்துக்கொண்டு யோசனை சொல்லி இருக்கிறார். குடிஜனங்கள் பின்னால் சங்கதி தெரிந்தால் அவர்கள் நம்மை அவமதித்து விடுவார்களே என்று கருதி, என் தகப்பனார் என்னைக் குடிஜனங்களுக்கு நல்லவனாய் நடந்துகொள்ளும்படியும், அடிக்கடி அவர்களைக் காணும்படியும், அவர்கள் க்ஷேம லாபங்களை விசாரித்து அன்பு வார்த்தை கூறும்படியும் செய்து அவர்களை என்வசமாக்கி வைத்தார். இவ்வளவு மாத்திரம் தானா? இன்னும் அவர் செய்த நல்ல காரியங்கள் எவ்வளவு தெரியுமா? கலியாணமானவுடன் பரதனைக் கேகய நாட்டிற்கு அனுப்பி விட்டார். அவனுக்கும் குடிகளுக்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# நீ வேசி மகன் என்பது நிஜந்தானா?

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# இந்துமதத்தைப் பள்ளியில் போதிப்பதென்றால்......?

(கைவல்யம்)

★

வாலிபர்களே! உங்கள் பொறுமை உங்கள் வயதையும் மீறிவிட்டது. உங்கள் தலைவரின் வட்டத்தில் நின்றது, உங்கள் ஆலோசனைக்கு அவசியமானது. அதன் பலன்கள் பின்னால் இருக்கிறது. நீங்கள் செல்லும் மார்க்கத்தைச் சுத்தம் செய்து விட்டீர்கள். மற்ற பெரிய சாதியாருக்கு மகிமை தந்ததும், அந்தப் பொறுமையேயாகும். இதிலிருந்து தான் நியாயம், உண்மை, விடுதலை உண்டாகும். ஆணவப் பேச்சு, அனியாயப்பேச்சுகளினால் நம் எதிரிகள் இனி எத்தனை நாள் வாழ்வார்கள்? அவைகள் பட்டு ஒழிந்து போகும். எதிரிகள் செய்யும் துன்பங்களைப் பொறுத்தல் தான் பொறுமை என்று மகாத்மா காந்தி சொன்னதைப் பின்பற்றிக் காட்டிவிட்ட உங்களுக்கு, உங்கள் காரியமெல்லாம் சாத்தியமே. நல்ல காரியங்கள் செய்வதில், அதின் உள்ளேயே ஆசீர்வாதமிருக்கிறது. அதற்கு வேறு ஆசீர்வாதம் தேவை இல்லை என்று, சிறிது நாளைக்கு முன் மகாத்மா சொன்னார். அது பெரிய அர்த்தத்தோடு கூடின பெரும் வார்த்தை. அவர் வார்த்தைப் பிரகாரம் உங்கள் கருப்புச்சட்டைக்கு ஆசீர்வாதம் தேவையில்லை, அதுவே ஆசீர்வாதம்.

ஆங்கிலேயர்களிடமிருந்து நாம் நல்லவைகளைக் கற்றுக்கொள்ளவில்லை என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். அது உண்மையே யாகும். ஆங்கிலேயர் ஸ்தம்பித்து நிற்கவில்லை, முன்னேறுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைகள் தமது சரித்திரத்தின் மூலமாக மாறியும், விசால மெய்தியும் வருகின்றன. அவர்கள் ராஜ்ஜியத்தையும், வியாபாரத்தையும் மாத்திரங் கவனிக்கவில்லை. அவர்களுடையசாதீயஜீவன், இலக்கியம்,சாஸ்திரம், கலை, ஊர்க்குடித்தனம் இவைகளில் முழு வெள்ளமாகப் பாய்ந்து செல்லுகிறது. அவர்கள் படைப்புவல்லவர்கள். தமது சித்தத்தை ஆத்ம பலியென்ற ஒளியினால் துளாவி, அவ்வொளியினால் மனுஷிய சரித்திரத்தைப் புதுமாதிரி வாசிக்கப் பழகுகிறார்கள். மனுஷிய சாதியை அவமானப் படுத்தி, அதற்கெதிரே பொய்த் தேசாபிமான, மதாபிமான, சாதி அபிமானக் கர்வத்தை ஓயாமல் நிறுத்துவதனால் பேராபத்து வருமென்பதை அவர்கள் கண்டறிந்தார்கள். நமது தேசத்துக் கடவுளே சகல தேசங்களுக்கும் கடவுள். அவருக்கு மனுஷியப் பசுக்களைப் பலியிட்டால், கோபமுண்டாகுமென்பதைப் புத்தி பூர்வமாகவோ, தம்மை அறியாமலோ கற்றுக் கொண்டார்கள். அதை நாமும் நம் மேதாவிகளும் தெரிந்து கொள்ளவில்லை. அதனாலேதான் நமது கவர்மெண்டு கஷ்டப்படுகிறது. ஒருவர்பேரில் ஒருவருக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. ஆங்கிலேய மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டாலும், புத்தி தெளிவடைவதில்லை. எது வந்துவிடுமோ என்கிற பயம் போவதில்லை. இந்தக் கவர்மெண்டுதான் நமக்குத் தடையும் உத்தரவும் போட்டிருக்கிறது. நாம் பொறுப்போம், பயமும் நீங்கிவிடும். இந்தக் கவர்மெண்டு மாறவேண்டுமென்பது நமது எண்ணமல்ல. நியாயமும் நேர்மையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதே நமது விருப்பம்.

ஆங்கிலேயர்களின் ஆட்டபாட்டங்களுக்கும், சபைகளுக்கும் போகவேண்டுமானால், முன்பு கருப்புச்சட்டைதான் போட்டுக் கொண்டு போகவேண்டும். இராஜாக்கள், கவர்னர்கள் முதலியவர்களை அழைக்கப் போகவேண்டுமானால், கருப்பு பெரிய லாங்கோட்டுப் போட்டுக் கொண்டுதான் போவார்கள். அய்ந்தாம் ஜார்ஜ் சென்னைக்கு வந்த சமயம், நமது பெரும் தலைவர் தியாகராஜ செட்டியார் மேயராக விருந்தார். ஆர்பரில் வரவேற்கும் ஏற்பாடு. வரவேற்புப்பத்திரம் வாசிக்க வேண்டியது மேயரைச் சேர்ந்தது. செட்டியார்அவர்கள் எப்பொழுதும் வெள்ளைச் சட்டைதான் போடுவார்கள். கருப்புச் சட்டை போடவேண்டு மென்றார்கள் அதிகாரிகள். என்னுடைய சொந்தஉடையில் தான் வருவேன் என்று சொல்லிவிட்டார் செட்டியார். அப்படியே வந்தார். வரவேற்பும் முடிந்தது. அதோடு அவ்வழக்கமும் தளர்ந்தது. மைசூர் தசராவில் அரண்மனைக்குள் போகவேண்டுமானால், கருப்புச் சட்டைதான் போட்டுக் கொண்டு போகவேண்டும். அதை வாடகைக்கு அங்கு கொடுக்கிறார்கள். ராஜாங்கத்திற்கே மதிப்பும் பெருமையும் பொருந்திய கருப்புச் சட்டையை, நமது இராஜாங்கம் தடுக்கிறது. கருப்புச் சட்டைக்குள் வேல், குந்தம், ஈட்டி, சக்கரம், சனியன், வெடி, துப்பாக்கி, பீரங்கி, அணுக்குண்டுகூட ஒளித்துவைத்திருப்பார்களோ, ஒளிந்து கொண்டிருக்குமோ என்று கவர்மெண்டுக்கு ஆலோசனை சொல்லப்பட்டது. இந்திரஜித்து என்கிற மேகனாதனும், இராட்சதர்களும் கருப்பானமேகத்தில் மறைந்து, சண்டைபோட்டார்களென்று இராமாயணம் சொல்லுகிறது. கல்வி மந்திரியும் இராமாயணத்திலிருந்து சுயராஜ்ஜியத்தை கட்டைத் தெடுக்கப் போகிறதாகச் சொல்லுகிறார். இராமாயண உரையும், சமயம் கிடைக்கையில் இராமாயணத்தை மேற்கோள் காட்டியும், தேசியப் பத்திரிகைகள் எழுதுகின்றன. அனுமாருக்குச் சமமாக இராஜகோபாலச்சாரியாரை ராஜமாளிகையில் குடியும்வைக்கப் போகிறார்கள். அனுமாரால் கருப்பு மேகத்தில் இராட்சதர்களைத் தேடினதுபோல, கருப்புச் சட்டையில் திராவிடர்களைத் தேடவேண்டியதுதானே. தேடின கருப்புச்சட்டையில் இதுவரையிலுமொன்றுமில்லை. இப்பொழுதே திருப்பிக் கொடுத்து விட்டார்களானால் உபயோகமுண்டு. கருப்புச்சட்டைக்குள் ஏதாவது ஒளித்துவைத்திருக்கிறார்களோ, அதையும்பிரித்துப் பார்த்துச் சொல்லுகிறோம் என்றுசொல்லிவிட்டால் யாருக்கும் உபயோகப்படாது. புது ராஜாங்கத்தின் திருநாள் அரசு பலருக்கு நன்மை செய்தது. கருஞ்சட்டைக் காரருக்கு, கள்ள மார்க்கட்டோ, கைக்கூலியோ, சிபார்சோ இல்லை. பணப்பெருமையாலோ, தெய்வத்தைக்காட்டி ஒண்ணரைவயிறு தின்னும் பெருமையாலோ நாங்கள் பேசுவதில்லை. இழிவும் அவமானமும் எங்கள் நெஞ்சைப் பிளக்கிறது. அதனால் சிலவற்றைச் சொல்லுகிறோம். உண்மையா? அல்லவா? என்பதைக் கவனியுங்கள்.

வாசகர்களே! நான் இராமாயணத்தை அடிக்கடி சொல்லிவருகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். பிராமணர்கள் இராமாயணத்தை விடமாட்டார்கள். நமது ராஜாங்கமும் அதைப் பூசிக்கொண்டு வருகிறது. நம் திராவிடர்கள் குடியைக் கெடுத்த இராமாயணத்தின் கருத்தும், முழுக் கதைகளும் அநேகருக்குத் தெரியாது. அவர்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## இல்லைஎனில் இழிவை நீக்க என்செய்தாய்?

# இதுவா வெகுமதி?

[பே. சோமு]

★

1809ல் கெண்டகி என்ற இடத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் ஆப்ரகாம் லின்கன் பிறந்தார். அவரது தந்தையின் தொழில், மரம் வெட்டுவது! வறுமையால் வாடிய அவர் அருகில் உள்ள ஒரு காட்டுக்குச் சென்று மரம் வெட்டி, தன் வாழ்வை நடத்தி வந்தார்.

லின்கன் பிறந்தபோது அமெரிக்காவிலே 'அடிமை முறை' தலைவிரித்தாடியது! பணம் படைத்த பிரபுக்கள் வாழ வழியற்ற ஏழைகளை விலைக்கு வாங்குவார்கள். அப்படி விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகள்பிரபுக்களால் எவ்வளவு கொடுமையாகவும் நடத்தப்படுவார்கள். அந்த அடிமைகள் அறிந்ததெல்லாம் உழைப்புத்தான்! இதுதான் அமெரிக்காவின் தென் பகுதியிலே ஆப்ரகாம்லின்கன் பிறந்தபோது இருந்த 'அடிமை முறையின் நிலை'

"எங்கள் வாழ்வு இப்படி வதிய வேண்டுமா? இரவு பகல் என்பதின்றி உழைத்து, உழைத்து உருமாறும் எங்கட்கு விடுதலை இல்லையா? மனிதர்களாகிய எங்களை மாடுகளைப்போல் விலை கொடுத்து வாங்குவது நீதியா? சரியா? முறையா? எங்கட்கு இழைக்கப்படும் கொடுமைகள் தீரும் நாள் வராதா? நாங்கள் மனிதர்களாகும் நாள்.........அந்த நன்னாள் வராதா? அறிஞர்களே! மாடுகளிலும் கேவலமான மனிதர்களான எங்கட்கு வாழ்வளிக்க வழி வகை இல்லையா? உங்கட்கு ஈவு, இரக்கம் இல்லையா? கொடுமையால் தாக்கப்பட்ட எங்கள் கூக்குரல் உங்கள் செவியில் விழவில்லையா? திக்கற்ற ஏழைகளான எங்கட்கு இழைக்கப்படும்இந்தஅநீதியைக் கண்டிக்க, இங்கு ஒருவரும் இல்லையா? என்று அடிமைகள் கேட்டனர். அவர்கள் ஏழைகள்! அடிமைகள்! அவர்களின் குறைகளையார் கவனிக்கப் போகின்றார்கள்? உல்லாசச் சீமான்களுக்கு இந்தத் தரித்திரம் பிடித்த ஏழைகளின் குறைகளைக் கேட்க, நேரம் ஏது? அடிமைகள் படும் அல்லல்களைப் பற்றி அவர்கள் எப்படி உணருவார்கள்? அவர்கட்குத் தெரிந்த தெல்லாம் மதுவின் சுவையும், அதை அன்போடு ஊற்றித்தரும், இன்ப வல்லிகளின் அதரச் சுவையும் தானே!

'மது—மங்கை! இந்த இரண்டினாலும் ஏற்படும் போகவாழ்வு! இவைதான் பிரபுக்களுக்குத் தெரியும். தாங்களடையும் இவ்வளவு இன்பத்துக்கு, எத்தனை ஏழைகளின் வாழ்வு பலியாக்கப் பட்டிருக்கும், என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்? தங்கள் உல்லாச வாழ்வு, இப்படியே, நீடித்து நிலைக்கும் என்றே நம்பிவந்தார்கள். அப்போது அவர்கள் அறியவில்லை, தங்களின் வீழ்ச்சி வெகுவிரைவில் இருக்கிறது என்பதையும், அடிமைகட்கு விடுதலை வாங்கித்தர வீரன் ஒருவன் தோன்றி விட்டான், என்பதையும்! கூறினால் கூட யாரும் நம்பமாட்டார்கள், மரம் வெட்டுபவனின் மைந்தன் மாவீரன் ஆவான் என்பதை!

லின்கன், சிறுவயதிலேயே தந்தைக்கு உதவியாக வேலையிலே அமர்த்தப் பட்டார். கல்வியிலே கரைகாணாத காதல், லின்கனுக்கு! ஆனால் வறுமையின் காரணமாக, லின்கன் பள்ளிக்கு அனுப்பப்பட வில்லை. பள்ளி செல்லா விட்டாலும், லின்கன், தன் தளராத உழைப்பால் தானே எழுதவும் படிக்கவும், சிறுகணக்குகள் போடவும் கற்றுக்கொண்டார். லின்கனின் 19வது வயதில் அவரது குடும்பம், 'கெண்டகியினின்று' 'மிஸிஸிபி' என்ற ஆற்றங்கரையில் உள்ள 'இல்லியோனாஸ்' என்னும் இடத்துக்குச் சென்றது. ஏழைகட்கு நிலையான இடம் ஏது?

லின்கன் இருந்த இடத்தில் அவர் ஒருவர்தான் படிப்பாளி! தேர்தலுக்கு நிற்கும் அங்கத்தினர்கட்கு; விளம்பரம் எழுதிக் கொடுப்பவர் லின்கனே! லின்கன் ஏழை! பிறருக்குதவும் பெருந்தன்மையுடையவர்! பெரும்பாலும் உலகிலே ஏழைகள்தான் இரக்கம் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்! ஏழைபடும் துன்பம் ஏழைக்குத்தானே தெரியும்? இந்த இரக்கமனம் படைத்ததால் லின்கனை எல்லோரும் விரும்பினர்.

இப்படிப்பட்ட நாளிலேதான், லின்கனின் வாழ்க்கையையே மாற்றக் கூடிய ஓர் சம்பவம் நடைபெற்றது! சம்பவம் மிகச் சாதாரண மானதுதான்! அது'படகுப் பிரயாணம்'. வியாபாரச் சாமான்களை ஏற்றிக் கொண்டு 'மிஸிஸிபி' ஆற்றில் படகில், லின்கன் சென்றார். அப்போது ஆயிரக்கணக்கான அடிமைகள் அருகில் உள்ள பருத்தித் தோட்டங்களில், கஷ்டப்பட்டு உழைப்பதைக் கண்டார்! இயற்கையிலேயே இரக்க மனம் படைத்த லின்கன் அவர்கட்காக மிகவும் வருந்தினார். வெறும் வருத்தம் மட்டும்·பட்டுவிட்டு என்ன செய்வது? 'அவர்களின் தலைவிதி' என்று தன் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடவில்லை. சிந்திக்கலானார்! இவர்கள் இப்படி உழைப்பது ஏன்? இவர்கள் அடிமைகள் ஆவதற்குக் காரணம் என்ன? இந்த அடிமை முறை அழிக்கப்பட வழி இல்லையா?" என்றுமென்மேலும் சிந்திக்கலானார். அந்த ஆற்றுப் பயணத்தில் ஏற்பட்ட சிந்தனையின் முடிவுதான் ஆப்ரகாம் லின்கனை அடிமை வாழ்வை அளிக்க அரசியல் துறையிலே ஈடுபடச் செய்தது! அரசியலிலே அவர் தோல்வியடைந்துவிடவில்லை!

30வது வயதில் லின்கன் சட்டசபை அங்கத்தினர் தேர்தலில் வெற்றி பெற்றார்! வெற்றியடைந்தபின் லின்கன் 'ஸ்பிரிங்பீல்ட்' என்ற இடத்திற்குச் சென்று அடிமை முறையின் கொடுமைகளைப் பற்றியும், அந்த முறையால் விளையும் கேடுகளைப் பற்றியும் ஓய்வு-ஒழிவின்றிப்பேசிவந்தார்! தன்னலமற்ற எண்ணமும், இரக்க உள்ளமும் படைத்த லின்கனிடம் மக்களின் மதிப்பு வளர்ந்தது. 1806-ம் ஆண்டு நடந்த தேர்தலில் லின்கன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அப்போது அமெரிக்கா வடநாடு, தென்னாடு என இருபிரிவுகளாக இருந்தது. வடநாட்டினர் அடிமை முறையை ஒழித்து விட்டனர். ஆனால் தென்னாட்டினர் இதற்குச் சம்மதிக்கவில்லை. எனவே தென்னாட்டினரோடு போர் தொடுத்துத் தீரவேண்டிய நிலை லின்கனுக்கு ஏற்பட்டது. வடநாட்டுக்கும், தென்னாட்டுக்கும் உள்நாட்டுப்போர் மூண்டது. வடநாட்டினர் சார்பில் லின்கன் போர்புரிந்தார். ஆரம்பத்தில் லின்கனுக்கு எங்கும் தோல்வியே ஏற்பட்டது. "இனி வீழ்ச்சிதான். தென்னாட்டினர்தான் வெற்றி பெறுவார்கள்! அடிமைமுறை இனிமேல் தலைவிரித்தாடப் போகிறது. லின்கன் தோற்றுவிடுவார்" என மக்கள் பேசிக் கொண்டனர். நிலைமையும் அப்படித்தான் இருந்தது. போரில் வடநாட்டினரில் எண்ணற்றவர்கள் கொல்லப்பட்டனர்! படைத்தலைவர்கள் மனம் தளர்ந்தனர். லின்கனை கைவிட்டுவிட நினைத்தனர்! ஆயினும் லின்கன் மனம் தளரவில்லை. படைகளை ஒன்றுகூட்டி உருக்கமான ஓர் பிரசங்கம் செய்தார். "தோழர்களே! இப்போது நாம் போர்க்களத்தில் கூடியிருக்கிறோம். ஆயிரக்கணக்கானவர்களின் உயிரைக்குடித்த இடத்தில் கூடியிருக்கிறோம்! இத்தனை பேர் இறந்ததுஎதற்காக என்பதைச்சிந்தியுங்கள்! அவர்கள் எதற்காகத் தங்கள் உயிரை விட்டார்களோ, அந்த லட்சியத்தை நிறைவேற்றுவது நம்கடமையன்றோ? நண்பர்களே! நெஞ்சத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்! உள்ளத்தைத் தளர விடாதீர்கள்! உறுதியைக் கைக்கொள்ளுங்கள்! குடிகளால் ஆளப்படும் 'குடி அரசு' ஏற்படப்போவது உறுதி" என்பதாக மிகவும் உணர்ச்சிகரமாகப் பேசினார். இந்தப் பிரசங்கம் நல்ல பயனைத் தந்தது. இந்தவீர உரையைக்

# மூட நம்பிக்கை.

—:இங்கர்சால்:—

தமிழாக்கம்: அரங்கண்ணல்.

★

புனித எலும்பு, மரத்துண்டு, மயிர், பல் ஆகியவைகள் வைக்கப்பட்ட பெட்டியை முத்தமிட்டதும், தங்களைப் பிடித்திருக்கும் பிணிகள் நீங்கியதாக நம்பிய பொழுது, இச்சின்னங்களெல்லாம் பிணி தீர்க்கும் மருந்துகள் என்றோ, பிணியைப் போக்கடிக்கும் சக்தியுள்ளவை யென்றோ நம் முன்னோர்கள் கருதவில்லை. ஆனால் இந்தப் பிணிகளுக்குக் காரணமான பேய்கள்—கெட்ட ஆவிகள்—'புனித'ப் பொருள்களைக் கண்டு பயந்தன; புனிதச் சிலுவையின் ஒரு சிறு துண்டுக்கு—ஞானியின் எலும்புக்கு, மனிதன் மீது தெளிக்கப்படும் 'புனித' நீருக்குப் பயந்து, பிடித்திருந்த இடங்களை விட்டு அவைகள் ஓடின, என்று நம்பினர்! ஆகவே இந்தப் பேய்கள் புனித ஸ்தலத்தின் மணியோசைக்கு, அங்கேயிருக்கும் மெழுகு வர்த்தியின் ஒளிக்கு, எல்லாவற்றையும்விடச் சிலுவைக்குப் பயந்து நடுநடுங்கின! அவைகளை வெறுத்தன! என்றும் நம்பினர்.

பேய், கெட்ட ஆவிகள் என்பன மீது ஏற்பட்ட நம்பிக்கை 'பில்லி சூனியம்' என்ற இன்னொரு நம்பிக்கைக்கு அடிப்பீடம் அமைத்தது. ஒரு ஆன்மாவைப் பேய்க்கு ஒப்படைத்தால், அதற்குப் பிரதி பலனாக, பண்ட மாற்றாக, குறிப்பிட்ட காரியங்களை அப் பேய் முடித்துத் தரும் என்றும் நம்பப்பட்டது. கூனி வளைந்து கிழடு தட்டிய கிழவன் மீண்டும் இளமையைப்பெற, வாழ்வின் உதய வேளையை எட்டிப்பிடிக்க இயலும்; ஏழை பணக்காரனாகலாம்; பேராசைக்காரன் தன்னிலைமையில் ஏற்றமடைந்து முன்னிலும் சிறந்த அதிகாரங்களை, ஏற்றங்களைப் பெறலாம்; தனது ஆன்மாவை இந்தக் கெட்ட ஆவிகளிடம் ஒப்படைத்து விட்டால், என்றெல்லாம் நம்பப்பட்டது!

வாழ்க்கையில் நடைபெறும் எந்த நற்செயலும் பேய்களின் கையிலிருப்பதாகவும் நம்பப்பட்டது. கெட்ட ஆவிகள் உண்டாக்கும் பாச உணர்ச்சிகளை எதிர்த்து நின்றால், அடுத்த உலகில் பரிசு காத்துக் கொண்டிருப்பதாகவும், ஆனால் பேய் இந்த மாய உலகிலேயே வேண்டியவைகளைச் செய்துதரக்கூடியதெனவும் நம்பினர்!

பில்லி சூனியம்—மாயாஜாலம் ஆகியவைமீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட வேதனைகளை, பதைபதைப்புகளைக் கற்பனையால்கூட நம்மால் எட்டிப் பிடிக்க இயலாது! குடும்பங்கள் குட்டிச்சுவராக்கப்பட்டது, தாய் தந்தையர்கள் வெஞ்சிறைக்குள் அடைபட்டு வாடியது, கொடுமைப்படுத்தப்பட்டது, கொளுத்தப்பட்டது, குழந்தைகள் கொடுங் கொலைக்கு ஆளானது, ஏழை, அனாதைக் கிழவர் ஆகியோர் சித்திரவதைகளுக்குள்ளாகி உறிஞ்சப்பட்டது ஆகியவைகளை உன்னிப் பாருங்கள்!

உண்மையை ஒளிவு மறைவின்றி எடுத்துச் சொன்னால் குற்றம், நிந்தித்தால் தண்டனை என்று கருதப்பட்ட காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் மனித மூளை, மூடநம்பிக்கைக்கும் அது விளைவித்த பயத்துக்கும் மூழ்கிக்கிடந்த அந்த நாட்களை எண்ணிப் பாருங்கள்!

இந்தப் பயங்களெல்லாம் மூட நம்பிக்கையின் விளைவுகள் என்று இப்பொழுது நமக்குத் தெரியும்.

ஏற்பட்ட பதைபதைப்புகளுக்கு, வேதனைகளுக்கு தாய், அறியாமைதான்; சூனியக்காரிகள் ஒருபோதும் இருந்ததில்லை; இருந்து எந்தப் பேயுடனும்-வியாபாரம் செய்தது, வேலை பேசியதில்லை; நமது சூதுவாதறியாத முன்னோர்கள் தவறியபாதையில் சென்றனர் என்பதெல்லாம் இப்பொழுது நமக்குத் தெரியும்!

அற்புதங்கள், சகுனங்கள், நடக்க முடியாதவை, கிரகணம், வால் நட்சத்திரம், எலும்பு, கெட்ட ஆவியின் அற்புத சக்திகள் ஆகியவைகள் நம்மூதாதையரின் நம்பிக்கையைப் பெற்றிருந்தன. மாயா ஜாலம் நிறைந்ததே மனிதஉலகம்; மாயா ஜாலங்கள் கெட்ட ஆவிகளின் கைப் பொருள்கள் என்றும் எண்ணப்பட்டது! ஏதாவது சம்பவம் நிகழ்ந்த தென்றால் அதற்கு உண்மையான, இயற்கையான, காரணம் இல்லை; பேய்விரும்பியது, அதுஉடனே நடந்து விட்டது. சாத்தானுக்கு தன் ஆத்மாவை அடிமையாக்கிய—விற்று விட்ட—ஒருவன் ஒருசில புதிய வார்த்தைகளை முணு முணுத்துச் சில சைகைகளைக் காட்டினான்; உடனே அவன்நினைத்தது நடந்து விட்டது என்றும் நம்பினர்!

நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்கான இயற்கையான காரணங்களை மக்கள் நம்பவில்லை. மாயை, ஜாலம் தவறான நினைவு, அற்புதம், கொடுமை ஆகியவைகளே உலகை அன்று ஆட்டிப்படைத்தது. அடிப்படையான காரணம் அப்போது புறக்கணிக்கப் பட்டது; உண்மையான காரணம் மறைக்கப்பட்டு ஒதுக்கப்பட்டது! கண்முன் கிடக்கும் காரணங்கள், உண்மைகள் மறைக்கப்பட்டு, மதிப்பளிக்கப் படாது சொல்லப்படாமலே விடப் பட்டபோது, ஒழுங்கினம் பொய்க் கூற்றுகளுக்கு இறக்கைகளையும் நாக்குகளையும் உண்டாக்கி விட்டது!

(வரும்)

---

கேட்ட கோழைகளும் வீரர்களானார்கள். புதிய உணர்ச்சியோடு போரிட்டனர்! எதிரிகள் முறியடிக்கப்பட்டனர்! தென்னாட்டினர் படுதோல்வியடைந்து 'அடிமைமுறை'யை ஒழிக்க ஒப்புக்கொண்டனர். அடிமைகள் சுதந்தர மக்களாகக் கருதப்பட்டனர். லின்கன் வெற்றி பெற்றார்! இரண்டாம் முறையாக லின்கன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்! வீரன் லின்கனால் அடிமைகள் விடுதலை பெற்றனர். விடுதலை வாங்கித்தந்த வீரன் லின்கன் ஓர் நாடகக் கொட்டகையில் வெறியன் ஒருவனால் சுட்டுக் கொல்லப் பட்டார்! அன்று அமெரிக்காவிலே விடுதலை வீரன் லின்கன் சுடப்பட்டார்! இன்று இந்தியாவிலே விடுதலை வீரர் காந்தியார் சுடப்பட்டார்! விடுதலைக்கு உழைக்கும் வீரர்களுக்கு மக்கள் அளிக்கும் வெகுமதி இதுதானா?

கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையில், பீடுடைய தில்.

—திருவள்ளுவர்.

# குடி அரசு

20—3—48 சனிக்கிழமை.

## எப்பொழுது சாவுமணி?

★

"நான் பிரதிநிதியாக வந்துள்ள பிரதேசத்தில் ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைவிடப் பெரிய பிசாசு இருக்கிறது. அதுதான் பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்னை. உத்தியோகங்களில் மாத்திரம் சலுகை காட்டப்பட்டிருந்தால், இப்பிரச்னையைப்பற்றிப் பேச நான் விரும்பியிருக்கமாட்டேன். ஒரு வகுப்பினர் அதிக ரேஷன் உணவு பெற்றாலும் எனக்கு அக்கரையில்லை. ஆனால் என் மாகாணமான சென்னையில், சர்வகலாசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதிலும் பாரபட்சம் காட்டச் சட்டம் உதவுகிறது. திறமை முக்கியமல்ல. ஜாதியே முக்கியம். கலை, விஞ்ஞானம், என்ஜினியரிங், தொழில் முதலிய காலேஜ்களில் வகுப்பு வாரியாக ஸ்தானங்கள் ஒதுக்கப்படுகின்றன. சட்டத்தின் பேரில் திறமையைப் புறக்கணிக்கும்படி கல்வி ஸ்தாபனத் தலைவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. கல்வி பெறும் உரிமை, மிக அடிப்படை உரிமைகளில் ஒன்று. அதைக் கட்டுப்பாடின்றி அனுமதிக்காவிட்டால், எழுதப்பட்ட காகிதத்தின் மதிப்புக்கூட அரசியலமைப்புக்கு இருக்காது. பொருளாதாரத் துறையில் பிற்போக்கான வகுப்புகளுக்கு உத்சாகம் அளித்தல் அவசியம் தான். அதை வேறு வகையில் செய்யலாம். பிற்பட்ட வகுப்பினருக்கு ஊக்கமூட்டுகிறோம் என்று கூறிக் கொண்டு ஒரு பிரிவு அல்லது கோஷ்டியின் அடிப்படை உரிமையான கல்வி கற்றலைப் பறிக்கக் கூடாது. ஜாதி மத பேதங்களுக்குச் சர்வகலாசாலைகளில் இடமில்லை. அப்படியுள்ள சர்வகலாசாலைக்கு மத்திய சர்க்கார் மானியம் அளிக்கக்கூடாது".. இவ்வாறு பேசியவர் துர்க்காபாய். யாரிடத்தில் பேசினாரோ அவர் ஆசாத் பாய். நடந்த இடம் மத்திய சட்டசபை. காலம், சென்ற 11ம் நாள்.

தோழியர் துர்க்காபாய் அவர்கள் ஒரு பார்ப்பனப் பெண் என்பதைத் தோழர்கள் புரிந்து கொண்டிருக்கவேண்டும். அவ்வம்மையாருடைய இனப்பற்றின் ஆழத்தைத் தோழர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே இதனைக் குறிப்பிடுகிறோம்.

நமது மாகாண சர்க்கார் ராமராஜ்ஜிய ஆட்சியாளர் கைக்கு வந்தவுடனே, சூத்திரத்தேவடியாள் பிள்ளைகளும், ஞானவுணர்ச்சி பெற்ற முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் முன்னேறாமலிருக்க, முதலில் என்ன செய்யவேண்டுமோ அதைத்தான் வந்ததும், வராததுமாகச் செய்ய ஆசைப்பட்டது; செய்து முடித்திருக்கிறது என்கிற சேதிகளை நடுவு நிலைமையோடு சிந்தித்துணரும் யாவரும் தெரிந்து கொண்டிருக்க முடியும்.

பிரகாசம் மந்திரி சபை அமைந்தவுடனே, அந்த மந்திரிசபையிலும் கல்வி மந்திரியாக இருந்த தோழர் அவினாசிலிங்கம் அவர்கள், பார்ப்பன மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள் சிலர் குறை கூறினார்கள் என்று சொல்லி, இந்த நாட்டு மக்களின் உயர்தரக் கல்வி முற்போக்கை அழிக்க, வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவ முறையில் மாணவர்கள், டாக்டர், என்ஜினியர் போன்ற படிப்புக்குச் சேர்க்கப்பட்டு வந்த முறையை மாற்றித் தகுதி, திறமை என்ற ஆயுதத்தைக் கைக்கொண்டதும், பிறகு அதன் கொடுமையை யுணர்ந்து வெற்றிகரமாக வாப்பீஸ் வாங்கிக் கைநெகிழ விட்டதும், எவரும் மறந்திருக்க முடியாத ஒரு சம்பவமாகும்.

ஓமாந்தூரார் மந்திரி சபை ஏற்பட்ட பிறகு, பூரண ராம ராஜ்ஜியம் என்ற அடிப்படையில், நம்மைத் தட்டிக் கேட்பவன் எவன் என்ற அகம்பாவத்தினால், வகுப்பு வாரி உத்தியோக வினியோகத் திட்டத்தில் கைவைத்து, ஆதிதிராவிடர்களுக்கு 100 க்கு 14 ஸ்தானங்களாகவும், முஸ்லிம்களுக்கு 100 க்கு 7 ஸ்தானங்களாகவும், கிறிஸ்தவர்களுக்கு 100 க்கு 7 ஸ்தானங்களாகவும், பார்ப்பனர்களுக்கு 100 க்கு 14 ஸ்தானங்களாகவும், பார்ப்பனரல்லாதாருக்கு 100 க்கு 56 ஸ்தானங்களாகவும் மாற்றி, திருத்திய மாபெரும் கொடுமையையும் எவரும் மறந்திருக்க முடியாது.

100 க்கு 3 பேராய் இருக்கும் பார்ப்பனர்கள், இந்த நாட்டுப் பெருங்குடி மக்களை—உழைப்பாளிகளை—தொழிலாளர்களை, பல ஜாதியினராக்கி—ஜாதிக்குள் பல உட்பிரிவினர்களாக்கி, பல மதத்தினர்களாக்கி—மதத்திற்குள் பல உட்பிரிவினர்களாக்கி, மதமோ ஜாதியோ கலந்துவிடக் கூடாது, ஒழிந்துவிடக் கூடாது என்ற போக்கிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து, சாஸ்திரத்தையும் சட்டத்தையும் காண்பித்து, அச்சுறுத்தி அடக்கி வருவதையும், அதனால் இந்த ஒரு மாகாணத்தில் மட்டும், நானூறுக்கு மேற்பட்ட ஜாதிக்காரர்களும் மதக்காரர்களுமாகப் பாட்டாளித் திராவிட மக்கள் பிரிந்து, ஒருவரோடொருவர் கொள்வினை கொடுப்பினை இல்லாமல், ஒருவர் பார்க்க ஒருவர் உண்ணாமல், ஒவ்வொரு கூட்டத்தையும் மற்றக்கூட்டங்கள் இழித்துப் பேசி, அதனதன் முற்போக்கை யழித்து வருவதையும், இதன்பயனாய், சிதறிய திராவிடர்கள் மேலும் மேலும் உருக்குலைந்து வருவதும், கட்டுப்பாடான பார்ப்பனர்கள் அன்றிருந்த மேனிக்கு அழிவின்றி இருந்து கொண்டு, மற்றவர்களை அடக்கி ஒடுக்கி வருவதுமாகவே இருந்து வந்திருக்கின்றார்கள், இருந்துவருகின்றார்கள் என்பதைச் சந்தர்ப்பம்நேர்ந்த பொழுதெல்லாம் நாம் விளக்கி வந்திருக்கிறோம். இதை இன்றுவரை எவரும் மறுக்கவுமில்லை. மறுக்கவுமுடியாது.

இத்தகைய பார்ப்பனர்களால்

ரோஜா முத்தையா

இந்த நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற நன்மை என்ன? இந்த நாட்டுப் பொதுச் செல்வம் இவர்களால் எந்த அளவு உயர்ந்திருக்கிறது? இந்த நாட்டின் பெருமை, கவுரவம் எந்த அளவுக்கு இவர்களால் உயர்ந்திருக்கிறது? இந்த நாட்டுச் செல்வம் வெளி நாட்டுக்கும், வட நாட்டுக்குமாக வெளியேறுவதற்கு இவர்கள் கங்காணிகளாயிருந்து வந்திருக்கின்றார்கள் என்பதையும், இந்த நாட்டுப் பெருமையை அழித்து வந்த கொலைகாரர்களாக இருந்து வந்திருக்கிறார்கள் என்பதையும்தானே, இந்த நாட்டில் வந்து குடியேறிய ஆரியர்களின் சந்ததி என்றுபேச்சிலும் நடத்தையிலும் காண்பித்துக் கொள்ளும் பார்ப்பனர்களின் சரித்திரம்உணர்த்துகிறது. இந்தநாடோடிக்கூட்டத்திற்கு, உடலுழைப்பே இல்லாமல் நாட்டுப் பொதுச் செல்வத்தை உறிஞ்சி வாழுகின்ற இந்தக்கூட்டத்திற்கு, மேலும் ஊக்கமும் பாதுகாப்பும் தருகிற முறையில், உயர்தரக் கல்வியும் உத்தியோகமும் அவர்களின் ஏகபோகச் சொத்தாகவே ஏன் இருக்கவேண்டும்? அவர்களால் நாட்டுப் பொக்கிஷத்திற்கு நலிவே தவிர, செல்வப் பெருக்கத்திற்குச் சிறிதும் இடமில்லை என்ற நிலை இருந்தாலும், அவர்கள் தொகைக்கு 15மடங்கு 20மடங்கு அதிகமான உயர்தரக் கல்வி ஏன்? உத்தியோகம் ஏன்? என்கிற சிந்தனையில், அவர்கள் தொகைக்கு ஏற்றபடி அவர்களுக்குக் கல்வியும் உத்தியோகமுமே கொடுக்கவேண்டியது நீதியும்,நியாயமுமாக இருந்தாலும் கூட முந்திய நீதிக்கட்சியார், நீதிக்குப் புறம்பாக, அவர்களின் தொகைக்கு ஏழெட்டு மடங்கு அதிகமாகவே பார்ப்பனர்களுக்கு உயர்தரக் கல்விக்கும் உத்தியோகத்திற்கும் ஏற்பாடு செய்தார்கள். நாதியுடைய சொத்துக்கும் கூட நாங்கள் தான் வாரிசு என்று ஏட்டில் எழுதிவைத்துக்கொண்டு ஆதாரம் காட்டி வரும் பார்ப்பனர்கள், தங்களுக்கே ஏகபோக உரிமையாயிருந்த கல்வித் துறை, உத்தியோகத்துறைகளில் விகிதாச்சாரம் என்பதைக் கேட்ட மாத்திரத்திலே, அந்த விகிதாச்சாரம் தங்களுக்கு 7, 8 மடங்கு அதிகமாகவே இருக்கிறது என்பதைத் தெரிந்தும்கூட அநியாயம்! அக்கிரமம்! அநீதி! என்று கூப்பாடு போட்டார்கள், நீதி, நியாயம், கிரமம் என்பதைத் தங்கள் பரம்பரையே அறிந்ததில்லை என்பதைத்தான் இந்தச் சம்பவத்திலிருந்து காண்பித்துக் கொண்டார்கள். இது முந்திய நிகழ்ச்சி.

இப்போது ராமராஜ்ஜிய ஆட்சியில், பார்ப்பனப்—பனியாவின் கூட்டாட்சியில் ஏன் இந்த நிலைமை இருக்க வேண்டும் என்பது தான் அக்கிரகாரஸ்தானின் அடிவயிற்றிலிருந்து வரும் கேள்வி. உத்தியோகத்தைப் பொறுத்தவரையிலும் "100க்கு 3 பேராய் உள்ளவர்களுக்கு 100க்கு 14 ஸ்தானங்கள் சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது; சட்டத்திற்குவிலக்காக, வேறு ஆள் இல்லை என்கிற சாக்கினால் 100க்கு 10 ஸ்தானங்கள் வரை வாங்கிவிடலாம்; மேற்கொண்டு மத்திய சர்க்காரில் வேறு எந்த அளவுக்கு, எப்படி எப்படி, எந்தெந்த மாதிரி வேஷம் போட்டு நுழையலாமோ, அந்த மாதிரியெல்லாம் நுழைவதற்கு வசதியிருக்கிறது; ஆகவே உத்தியோகத் துறையை வெளிப்படையாகக் குறை கூறாமல், "சட்டியில் இருந்தால் தானே அகப்பையில்வரும்" என்பதை எண்ணி, படிப்பதிலே மற்றவர்களை முன்வர விடாமல் தன் ஒரு இனமே கல்வித் துறையைப் பூரணமாகக் கைப்பற்றிக் கொண்டுவிட வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறது.

அத்திட்டத்தை நிறைவேற்றத் தான் பார்ப்பனீயம் அம்மையாரைக் கருவியாகக் கொண்டுவேலை செய்கிறது என்பதை, இந்தநாட்டு மக்கள் எக்கட்சியினராயிருந்தாலும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மக்களுடைய வரிப்பணத்திலிருந்து நடப்பதுதான் இன்றைய அரசியலமைப்பிலுள்ள மாகாண சர்க்காரும், மத்திய சர்க்காரும். மக்களிடமிருந்து பெற்ற செல்வத்தைக் கொண்டுதான் இன்றைய ஆட்சியாளர் எவரும் வயிறு வளர்க்கிறார்கள். அவர்களின் சுக போகத்திற்கு, ஆர்ப்பாட்ட அநாவசியச் செலவுகளுக்குப் போக மிஞ்சுவதைத்தான் மக்களுடைய பொது நலத்திற்குச் செலவு செய்கிறார்கள். இதை அழுத்தமாக மனதில் ஒவ்வொருவரும் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

நமது மாகாணத்தைப்பொறுத்தவரையிலும், பார்ப்பனர்களால்எவ்வளவு வரிப்பணம் சர்க்காருக்குச் சேருகிறது? இதை நாணயம் என்ற சொல்லின் பொருள் தெரிந்த சர்க்காராயிருந்தால் உடனே கூறியாகவேண்டும். உடலுழைப்பே இல்லாத இந்தக் கூட்டத்தால், ஏதோ ஒரு அளவு வருமானம் இருக்கிறது என்று சர்க்கார் கணக்குக் காட்டினாலும்கூட, அது பிறவி முதலாளித்துவ முறையால் கொடுக்கப்பட்டதாகத்தான் இருக்க முடியுமே தவிர—மற்றவர் உழைப்பில் வஞ்சித்துக் கொள்ளையடித்ததில் பங்கு கொடுத்ததாகத்தான் ஆகுமே தவிர, உண்மையாகவே உழைத்த சொந்த முதலாக ஒரு போதும் இருக்காது என்பதை நாம் எங்குவேண்டுமானாலும், எப்போதும் கூறத் தயாராயிருக்கிறோம். அப்படியே ஊரார் உழைப்பை உறிஞ்சியதில், சர்க்காருக்கு அவர்கள் எவ்வளவுதான் உறிஞ்சக் கொடுத்தார்கள் என்றால், அந்தத் தொகைக்கும், அவர்களுக்காகச் சர்க்கார் செலவு செய்துவருகிற தொகைக்கும் கணக்குக்காட்டுவதுதானே, இத்தகைய அம்மையார்களின் கூக்குரலுக்கோ, நீலிக்கண்ணீருக்கோ, தலையணை மந்திரத்திற்கோ பதில் கூறுவதாக இருக்க முடியும் என்று கேட்கிறோம்? சென்னை சர்க்காரைக் கேட்கிறேன் என்று அம்மையாருக்கு ஆறுதல் சொல்லிக் கண்ணீரைத் துடைத்த ஆசாத்பாய் சென்னை சர்க்காரைக் கேட்டால், மக்கள் சர்க்கார் என்று கூறிக் கொள்ளும் சென்னை சர்க்கார், இந்தக் கணக்கைத்தானே அறிவிக்கவேண்டும்? அறிவித்ததுடன் நில்லாமல் அவர்களால் வந்த வருமானத்திற்குத் தக்கபடிதானே அவர்களுக்கு இனி மேலாவது செலவு செய்யவேண்டும்? இதைச் செய்வார்களா? இதை இந்த நாட்டுச் செல்வப் பெருக்கிற்குக் காரணமான ஏழைப் பாட்டாளித் திராவிடர்களின் சார்பாக நாம் கேட்கிறோம்.

நவீன காளிகாதேவி அவர்கள், ஆசாத்பாயை எப்படி வசியப்படுத்தித், தனதுமயக்குரையிலே மயங்க வைத்துத், தனக்குச் சாதகமான தீர்ப்பை வாங்கியிருக்கின்றார்கள் என்பதை இனிக் கவனிப்போம்.

இந்து-முஸ்லீம் பிரச்னை ஒரு பிசாசு. அதைவிடப் பெரிய பிசாசு பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிரச்னை என்கிறார் துர்க்காபாய்.

இந்து—முஸ்லீம் பிரச்னை என்ற பிசாசினால் (அம்மையார் கருத்துப்படி) பெரும் வேதனைக்

குள்ளான வடநாட்டாரிடம், அதைக் காட்டிலும் ஒரு பெரிய பிசாசு இருக்கிறதுஎன்றால், கேட்டவுடன் நம்பி விடுகிறது என்ற புத்தி படைத்த எவரும் கலங்கத்தான் செய்வர். "இந்து முஸ்லிம் பிரச்னை என்ற பிசாசினால் எத்தனை கொலைகள், கொள்ளைகள், பெண் சோரம் போன்ற மிருகச் செயல்கள் நடந்தன! அதைக் காட்டிலும் பெரிய பிசாசு என்றால் எத்தனை பார்ப்பனர்கள் கொல்லப்பட்டார்கள்? பார்ப்பன வீடுகள் எத்தனை கொள்ளையடிக்கப்பட்டன? பார்ப்பனப் பெண்கள் எத்தனை பேர் பலாத்காரமாகச் சோரம் செய்யப்பட்டிருக்கின்றனர்? என்கிற செய்திகள் இதுவரைஒன்றையும் காணோமே! இந்த பாய் கூறுவது நிஜமாக இருக்குமா?'' என்றல்லவா வடநாட்டுக்காரராயிருந்தாலும், பொறுப்பான ஒரு மந்திரியாயிருக்கிற பாய் எண்ணியிருக்கவேண்டும்? ஆனால் ஆசாத் பாய் அவர்களோ, அம்மையார் கூறியதை அப்படியே எடுத்துக்கொண்டு, சென்னை சர்க்காரைக் கேட்கிறேன் என்று அம்மையார் முன்னால் சிந்தனையைப் பறிகொடுத்து விட்டார்.

"பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகங்களில் சலுகையோ உணவு ரேஷனில்சலுகையோகொடுத்திருந்தாலும்கூட அம்மையார் கவலைப்படமாட்டார்களாம்!'' இது விஷமத்தனம் பொங்கி வழியும் கூற்று.

100க்கு 75 பேராயிருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கு 100க்கு 56 ஸ்தானமும், 100க்கு 3பேராயிருக்கும் பார்ப்பனருக்கு 14 ஸ்தானமும் கொடுக்கிறதென்று, சுப்பராயக் கவுண்டர் பிரதிநிதியான ராமராஜ்யம் சட்டம் போட்டிருக்கிறதென்றால், சலுகை காட்டப்பட்டிருப்பது யாருக்கு? பார்ப்பனருக்காக? பார்ப்பனரல்லாதாருக்கா?

ஏன் உணவு ரேஷன் கதையைத்தான் எடுத்துக் கொள்ளட்டுமே! கோயில் பூனைகளாகவும், புரோகிதப் பெருச்சாளிகளாகவும், காபிகிளப் மலைப் பாம்புகளாகவும் இருக்கிற பெருவாரியான பார்ப்பனர்களை, இப்போதைய உணவு ரேஷன் எந்த வகையில் பாதித்தது என்று சொல்ல முடியுமா? உத்தியோகங்களில் இருக்கிற உருட்டல் மிரட்டல் பார்ப்பனர்களைத்தான், உணவு ரேஷன் எப்படிப்பட்டினி போட்டுவிட்டது என்பதைத்தான் சொல்ல முடியுமா? உணவு ரேஷனில் 100க்கு 100பார்ப்பனர்களும் உணவுப் பொருளைப் பெறுவதற்குத் தான் வாய்ப்பும், வசதியும், சட்டமும், சந்தர்ப்பமும் உதவியாக இருக்கிறதே தவிர, பார்ப்பனரல்லாதார் உழவுத் தொழிலைச் செய்தும் உணவுப் பொருளுக்குத் திண்டாடவேண்டியிருக்கிறதே தவிர வேறு என்ன?

அப்படியிருக்க உத்தியோகத்தில் சலுகையும், உணவு ரேஷனில் சலுகையும் பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுத்தால்கூட நான் மனம் பதறமாட்டேன் என்று அம்மையார் கூறுவது எவ்வளவு வடிகட்டின அயோக்கியத் தனம்?

"திறமை முக்கியமல்ல, ஜாதியே முக்கியமாம்! விஞ்ஞானம், என்ஜினியரிங் கல்லூரிகளில் வகுப்புவாரியாக ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன! இதற்குச் சட்டம் உதவி! இருக்கலாமா இந்த நிலைமை'' என்கிறார் அம்மையார். இவருடைய இந்த வாதத்திற்கு "கல்வி பெறும் உரிமை மிக அடிப்படை உரிமைகளில் ஒன்று'' என்கிற நியாயத்தை எடுத்துக் காட்டுகிறார்.

கல்வி பெறும் உரிமை மனிதனின் அடிப்படை உரிமை. இதைத்தான் நாமும் கூறுகின்றோம். வரி வாங்கிப் பிழைக்கும் சர்க்கார், வேறு எந்த நன்மையையும் மக்களுக்குச் செய்யாது போனாலும், மக்களின் அடிப்படை உரிமையான கல்வியை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். பார்ப்பனர்கள் 100 க்கு 100 பேரும் படித்தவர்களாயிருக்கின்றார்கள். திராவிடப் பாட்டாளிகளோ 100 க்கு 5, 6, பேர்தான் படித்தவர்களாய் இருக்கின்றார்கள். இதுநாம் சொல்லுகிற புள்ளி யல்ல. கையாலாகாத சர்க்கார் காட்டுகிற கணக்கு. அப்படியானால் எந்த வகுப்பாருக்கு மனிதனின் அடிப்படை உரிமையான கல்வி பெறும் உரிமையை வழங்க மறுக்கப்பட்டிருக்கிறது? பார்ப்பனருக்கா? பார்ப்பனரல்லாதாருக்கா?

வகுப்பு விகிதாச்சாரம் என்கிற நிலை,உயர்தரக்கல்வியில்; அதுவும் தொழில் கல்வியில். இந்தநிலைக்கு "கல்வி உரிமை மனிதனின் அடிப்படை உரிமை'' என்கிற நியாயம் எப்படிப் பொருந்தும்? இந்த நியாயத்தை எழுத்தறிவே இல்லாத, 100 க்கு 95 பேராக இருக்கும் திராவிடர்கள் பக்கம் ஏன் காட்டக் கூடாது? மனிதனின் அடிப்படை உரிமை பறிக்கப்பட்டு, மிருகத்தினும் கேடுகெட்டவனாகத் திராவிடன் வாழ, அவனுழைப்பை உறிஞ்சிப் பிழைக்கும் சர்க்கார், அவனுக்கு வஞ்சகம் செய்வதே தன் வாடிக்கை என்று கொண்டால், நவீன காளிகா தேவிகள் ஏன் தோன்றமாட்டார்கள்?

திறமை திறமை என்று பார்ப்பன ஆண்களும் பெண்களும் கூப்பாடு போடுகிறார்களே! திறமை என்ன அவர்களுக்குத்தான் காபிரைட் உரிமையா என்று ஏன் சர்க்கார் எண்ணக் கூடாது? திறமைக்கு அளவு என்ன? அவர்கள் வகுப்புகளில் பெற்ற மார்க்கு தானே திறமைக்கு அளவாகக் கொள்ளப்படுகிறது. அந்த மார்க் யாரால் கொடுக்கப்படுகிறது? இதை ஏன் "திறமை'' "திறமை'' என்று திருகுதாளம் பேசுபவர்கள் எண்ணக் கூடாது? கீழ் வகுப்புகளில் பெற்ற மார்க்குக்கும், மேலே அவர்கள் படிக்கும் தொழிற் கல்விக்கும் என்ன சம்பந்தம்? இதையேன் நினைத்துப் பார்க்கக் கூடாது? தொழிலுக்கும் தனக்கும் தொடர்பேயில்லாத ஒரு சமுதாயத்தில் பிறந்து வளர்ந்தவர்கள், தொழிற் கல்வியிலும் முழு இடத்தைக் கொள்ள வேண்டுமென்றால், அதற்கு அவர்களின் தனிப்பட்ட பிறப்புரிமையான "திறமை'' முன் வந்து உதவுகிறதென்றால், இந்த அர்த்தமில்லாத திறமையை எந்த மானமுள்ள திராவிடனாவது ஒப்புக் கொள்ள முடியுமா என்று கேட்கிறோம்?

ஜாதி முக்கியம் என்று யார்கூறுகிறார்கள்? ஜாதிகள் இருப்பதால் லாபமடைந்து கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் ஜாதி முக்கியம் என்கிறார்களா? ஜாதிகள் இருப்பதால் அழிவடைந்து கொண்டிருக்கும் திராவிடர்கள் ஜாதி முக்கியம் என்கிறார்களா?

மற்ற எல்லோரும். பல ஜாதிக்காரர்களாய்ப் பிரிந்திருந்து, நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த உழைத்து உழைத்துக் கொடுக்க வேண்டும்! பார்ப்பனர்கள் மட்டும் உழைக்காமலே கல்வியையும், உத்தியோகத்தையும்பெற்று, மேன்மேலும் திராவிடர்களை வாட்டி வதக்குவதற்கு உதவியும் ஊக்கமும் பெறவேண்டுமென்றால் அதை எவன் ஒப்புக் கொள்ள முடியும்? சுயமாகச் சிந்திக்கும் தன்மை வந்துவிட்டால்

நம் அவினாசிலிங்கம் தான் ஒப்புக்கொள்வாரா? சுப்பராயன் தான் ஒப்புக்கொள்வாரா?

அம்மையார் கூறுவது போலச் சட்டம் உதவியாயிருக்கிறது. அது வாஸ்தவம். யாருக்கு உதவியாயிருக்கிறது? பார்ப்பனருக்கா? பார்ப்பனரல்லாதாருக்கா?

பார்ப்பனர்கள் 100-க்கு 3 பேராக இருந்துங்கூட, அவர்களுக்கு உத்தியோகங்களில் 100 க்கு 14 ஸ்தானம் கொடுத்து, உயர்தரக் கல்வியிலும் அவர்கள் தொகையைக் காட்டிலும் ஏழெட்டு மடங்கு அதிகமாகக் கிடைக்கச் சட்டம்செய்திருந்தும், “மற்றவர்களும் படிக்கிறார்களே, மற்றவர்களும் உத்தியோகங்களுக்கு வருகிறார்களே” என்ற ஆத்திரத்தினால் சென்னை மாகாணத்தில் சர்வகலாசாலைகளே வேண்டாமென்கிறார் இந்தத் துர்க்கை அம்பிகை! இத்தகைய சர்வகலாசாலைகளுக்கு ஏன் மத்திய சர்க்கார் மானியம் அளிக்க வேண்டும் என்கிறார் நவீனகாளிகா தேவியார்!

மானியம் என்றாலே அது பார்ப்பனர்களுக்குத்தானே! மற்றவர்களுக்கு மானியம் எப்படிப்பாத்தியதையாகும்? என்கிற பரம்பரைப் பிச்சைக்காரப் புத்தி அம்மையாருக்கிருக்கிற வரையிலும், அதற்கு அனுகூலமான சாஸ்திரங்கள் கவுரவிக்கப்பட்டுச் சட்டங்கள் அமுல் நடத்தப்படுகிற வரையிலும், நாம் கூறிக் கொண்டிருப்பது மட்டும் பயன்படாது. மத்திய சர்க்கார் மானியம் அளிக்கிறார்கள் என்றால், அது மத்திய சர்க்காரின் சொத்தா? அந்த அம்மையாரின் சொத்தா? அல்லது அம்மையாரின் ஆத்துக்காரரின் சொத்தா? இந்த மாகாணத்திலிருந்து அடித்துக்கொண்டு போகிற கொள்ளையிலிருந்து, ஒரு சிறு பகுதியைத் தானே மானியம் என்கிற பெயரால் மத்திய சர்க்கார் திருப்பிக் கொடுக்கிறார்கள் என்று ஏன் நாம் கூறக்கூடாது?

ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர், திறமை என்ற புலி வேஷம் போட்டு நிலையாகவே நடிக்க ஆசைப்படுகின்றார்கள். அந்த வேஷம், அடிக்கின்ற மழையாலும், காய்கிற வெயிலாலும் கலைந்து சிதைந்து போனதைக் கருதமாட்டோம் என்கிறார்கள். இந்த ஏமாற்றுக்காரர்கள் வாழ்வு இன்னும் எத்தனை நாள்? ஏ திராவிடனே! நீ காங்கரஸ்காரனாயிருந்தாலும், எம். எல். ஏ.யாக இருந்தாலும், மந்திரியாக இருந்தாலும், யாராயிருந்தாலும் எண்ணிப்பார்! இந்த ஏமாற்று வாழ்விற்குச் சாவுமணியடிக்க வேண்டாமா? எப்பொழுது? யோசிக்கிறாயா? யோசி! நன்றாக யோசி! விரைவில் முடிவு கட்டு!

## நண்பர் காட்டிய வழி.

★

(ஜப்பல்பூர் போன்னையா)

நம்நாட்டு உயர்தரக் கல்வியைக் கருத்துடன் கற்று, கரை சேரும் மார்க்கமின்றி கலங்கி வாடும் என்னுடன், கல்வியின் செல்வன் கணப்பொழுது வந்து என்னைக் கடிந்துமே நோகலானான். யார் அவன்?

ஆம்! பகுத்தறிவுவாதி கூறலானார். கரைசேர்க்கும் மார்க்கம் காட்டுவேன் என்னுடன் வா என்றார். ஆனால் நான் காட்டும் பாதை மணல், கல், காடு, மேடு, பள்ளம், பாறை, வானளாவிய மலை, அதில் செடிகள் கொடிகள், புதர்கள், வானோக்கி ஓங்கி வளர்ந்த மரங்கள், அந்த மரக்காட்டில் வாழும் விஷ ஜந்துக்கள், கொடூர மிருகங்கள், நிறைந்த வழி என்று கூறவே நான் அவரது முகத்தை ஆச்சரியத்துடன் நோக்கலானேன். அவர்மேன் மேலும் கூறலானார்.

அய்யம் தவிர்த்து, பிறர் வன்மொழியைக் கிஞ்சித்தேனும் நினையாமலும், ஊக்கமும், உறுதியும், விடாமுயற்சியும் கைக்கொண்டு அறிவு என்னும் வாள் வேல், பீரங்கிகளை எடுத்து, வீரம் என்ற புரவி மேல் ஏறி, நேசம் என்ற அம்பு கொண்டு, மதம், ஜாதி, சனாதனம், என்ற துஷ்ட மிருகங்கள் வாழும் வனாந்தரத்தை (கோயில்களை) வேட்டையாடிக் கடந்து சென்றால்,

உண்மையே உயர்வாகவும், தன்மான உணர்ச்சியும், பொறுமையுமே குன்றாகவும் நின்று, இயற்கையே கடவுள் என்றும், பிறருக்கு அடிமை நான் அல்ல என்றும், அன்னியர் வருந்தத தான் வருந்தியும், பழைமையைப் போக்கிப் புதுமைச் சிற்பியாயும், ஜாதி என்னும் கோட்டையைத் தகர்த்து நீதியுடன் எல்லோரும் சமமே! இறந்த வரை நினைத்து இருப்பதை அழிக்காதே! என்று கூறி மனிதஇனப்பற்று மிளிர முகத்திலே வெண் தாடியும், கையிலே கோலும், முகத்திலே மூக்குக் கண்ணாடியும், உடம்பிலே அடிமையின் இழிவை நீக்க, உணர்ச்சியை எழுப்ப கருப்பு அங்கியும் பார்வையிலே தீரமும் கொண்டு, என்றென்றும் திராவிட மக்கள் அடிமை என்று கூறும் மலையின் அப்புறத்திலே, போர் புரிந்து திரும்பிவரும் மகனை நேயமுடன் அன்பு வார்த்தை கூறிப் பாசமுடன் கட்டிமுத்தம் கரும்தந்தை போல் வீற்றிருக்கிறார்.

ஆம் திராவிடத் தந்தை! உலகம் போற்றும் உத்தமச் சீர் திருத்தவாதி! வைக்கம் வீரர்! வைதீகக் கட்டுப்பாட்டுக்கு அடங்காத காளை! ஈரோடு என்று அம் மலையின் அப்புறத்தே அமைந்து இருக்கும் பாறைமீது, புரட்சி என்னும் மந்திரம் கொண்டு, பழமையைப் போக்கி புதுமையைச் சிருஷ்டித்த தந்தை உனக்காக தயங்கிநிற்கிறார். அவரிடம் சென்றால் நீ படித்துப் பட்டம் பெற்றதின் பலன் கிட்டும் என்று பகுத்தறிவுத் தோழன் கூற ஆம் உண்மை! உண்மை! என்றே முணுமுணுத்துக் கொண்டு ஈரோட்டுப் பாதையின் கோடிக் கிளைகளில் ஒரு கிளையைப் பின்பற்றி சீரிய நோக்கமுடன் புறப்பட்டேன்.

என்ன ஆச்சரியம்! என் பின்னாலும் என் முன்னாலும், என் போன்ற வாலிபர்கள் கோடிக்கணக்கில் திராவிடநாடு திராவிடருக்கே! தமிழ் வாழ்க! வைக்கம் வீரர் வாழ்க! வெண்தாடிச் செம்மல் நீடூழி வாழ்க! என்ற ஜெய கோஷமிட்டு ஈரோட்டுப்பாதையின் கிளைகளைப் பின்பற்றி நடக்கக் கண்டேன். முன்னால் போகிறவர்களில் முதல்வர் யார்? பின்னால் வருகிறவர்களில் கடைசி யார்? என்பதை நானும் பார்த்துவிடலாமென்றுதான் முயலுகிறேன். என்னால் முடியவில்லை.

## தடைவிதித்த சுப்பராயன் தடுமாடுகிறார்!

★

கருஞ்சட்டை ஸ்தாபனத்தின் நோக்கம் தெரியாது.

அதன் நடவடிக்கையையும் என்னால் விளக்க முடியாது.

தடை விதித்ததற்குக் காரணம் கூறவேண்டியது முறையும், வழக்கமுமாக இருந்தாலும், காரணம் காட்டவேண்டிய அவசியமில்லை.

யாரும் கருப்புச்சட்டை போடுவதற்கு எவ்விதத் தடையுமில்லை.

கருஞ்சட்டை ஸ்தாபனம் என்பது உள்ளதா? இல்லாததா என்பது (தடை விதித்ததைப் பற்றிக் கேள்வி கேட்டபோது) சம்பந்தமில்லாத கேள்வி.

# திராவிடர் கழக 18-வது மாகாண மாநாட்டின் வரவேற்புக் குழுவினர்கள்.

—:!:—

தூத்துக்குடியில் கூடும் மாகாண மாநாட்டிற்குத் தோழர் V. V. தனுஷ்கோடி B. A., அவர்கள் தலைமையில் கூடிய வரவேற்புக் குழு அமைக்கும் கூட்டத்தில் கீழ்க்கண்டவர்களை ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வரவேற்புக் கமிட்டித் தலைவர்கள்:—
தோழர்கள் 1. E. V. A. வள்ளிமுத்து அவர்கள்.
,, 2. S. நீதிமாணிக்கம் ,,
செயலாளர்:— K. V. K. சாமி அவர்கள்
உதவிச் செயலாளர்கள்:— 1. N. V. நடராஜன் அவர்கள்
2. P. S. சண்முகம் 3. சிவ. சண்முகசுந்தரம் ,,
பொருளாளர்:— V. V. தனுஷ்கோடி B. A. ,,
தொண்டர் தலைவர்கள்:— 1. M. R. ராதா ,,
2. C. அருணாசலம் அவர்கள்
விளம்பர அதிகாரிகள்:— 1. து. இரத்தினம் ,,
2. P. M. சண்முகம் ,,

---

[5ம் பக்கத் தொடர்ச்சி]

கள் இராமாயணம் செல்லுகிற இடத்திற்கெல்லாம், நம் இராமாயணமும் செல்லவேண்டும். நான் சொல்லுவது தப்பாயிருந்தால் சொல்லட்டும்!

மகாத்மா காந்தி அவர்கள் இறந்த உடன், கல்விச்சாலைகளில் மதம் போதிக்கக்கூடா தென்று பெரிய இடத்தார் பலர் சொன்னார்கள். நமது சட்டசபையில் மதக்கல்வி பள்ளியில் போதிக்கப்படுமா என்கிற கேள்வி வந்தது? நமது கல்வி மந்திரி கையிருப்பில்லாமல், அப்படியும் இப்படியும் சொல்லி மதக்கல்வி வேண்டியதுதான் என்கிற மாதிரி பேசினார். பள்ளியில் மதக்கல்வி மாணாக்கர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதை இந்துக்கள் சொல்லுவதில் ஆலோசனை இல்லை. கிறிஸ்தவர்களுக்குப் பைபில் இருக்கிறது. முகம்மதியர்களுக்கு குரானிருக்கிறது. இந்துக்களுக்கு என்னவிருக்கிறது? எந்த ஏட்டைச் சொல்லிக் கொடுப்பது? சூத்திரப் பிள்ளைகளுக்கு இந்து மதத்தைக் கற்றுக் கொள்ளப் பாத்தியதையில்லை.

"அதஹாஸ்ய வேதமுபஸ்ருண்வத.
ஸ்ரோத்ரெளத்ர புஜதுப்யாம்
பூரயேத பூரயேத"

வேதம் ஓதுங்கால், அதைக் காதால் கேட்கிற சூத்திரனது காதுகளில், ஈயத்தையும் மெழுகையும் உருக்கிவிடவேண்டும். பின் சமயம் எப்படிப் படிப்பது?

"பத்யுஹவா ரதத் ஸ்மசானம்
வைசூத்ரஸ்த:
ஸ்மாத் சூத்ரஸ் மீபேநாத்யே,
தவ்யம்"

சூத்திரன் நடமாடுகிற இடம் சுடுகாடானதால், அவன் பக்கத்தில் வேதமோதலாகாது. இந்து சமயப் பிரகாரம், சூத்திரப்பிள்ளைகளுக்குச் சுடுகாட்டில் தானே பள்ளிக்கூடம் கட்டவேண்டும்.

"நசூத்ராய மதிம்தத்யாத்" என்ற ஸ்மிருதிப் பிரமாணப்படி, சூத்திரனுக்குப் பகுத்தறிவுண்டாகும்படி யாதும் செய்யலாகாது. அதாவது ஞானநூல் கற்பிக்கப்படாதென்பதாம். இன்றும் அப்படித்தான். பின் எதைக் கற்றுக் கொடுப்பது? சமயம் கற்றுக் கொடுப்பதென்றால் என்ன? பங்தொளிக்கும் செப்பிடு வித்தையா? குட்டிக்கரணம் போடுவதா? சூத்திரனுக்குப் புராணந்தான் சமயம் என்று சொல்லுகிறார்களே, அதைக் கற்றுக் கொடுப்போமென்றால், எந்தப் புராணத்தைக் கற்றுக் கொப்பது? உலகத்தைப் பாயாய்ச் சுருட்டி கமுக்கட்டில் இடுக்கிக் கொண்ட ராட்சதன் புராணத்தைச் சொல்லிக் கொடுக்கலாமா? பிர்மாவின் பிள்ளைகளான சனகாதி மகா ரிஷிகள், ஒழுங்குக்கு மீறி நியாயத்திற்குக் கட்டுப்படாமல் விஷ்ணுவின் காவற்காரர்களுக்குச் சாபங் கொடுத்தையும், அதற்கு உடைந்தையாகவிருந்த மகா விஷ்ணுவையும், பெருமையாகப் பேசும் விஷ்ணு புராணத்தைக் கற்றுக் கொடுக்கலாமா? இதை ஆதிச்சைவன் அனாதிச் சைவனெல்லாம் ஒத்துக் கொள்ளுவார்களா? ஆயிரம் தலை இரண்டாயிரம் கைகளை உடைய சிங்கமுகன், தாருகன் என்னும் இராட்சதர்களைக் கொல்ல, சிவபெருமான் அநேக யுகம் பார்வதியைக் கூடிப்பெற்ற சுப்பிரமணியர் புராணமான கந்த புராணத்தைப் பாடமாக வைக்கலாமா? வைணவர்கள் ஒத்துக்கொள்வார்களா? தமிழ் வேதமென்று சொல்லுகிறார்களே தேவாரத்தை, அதை வைக்கலாமா? வேத வேள்வியை நிந்திக்கும் புத்த சமயத்தவர்களைக் கழுவில் போடு என்கிறது தேவாரம். அவர்கள் நீதியான சக்கரம் தான் நமது தேசீயக் கொடியில் பறக்கிறது. தேவாரம் அம்மன் முலைப்பாலுண்டதும், தடுத்தாட் கொண்டதும் மட்ட ரகத்தைச் சேர்ந்து விட்டது. பின்னே எதைப் பாடமாக வைக்கிறது? சொல்லுங்கள் சமய சாஸ்திரப் பண்டிதர்களே!

எதற்கும் இராமாயணத்தை வைத்து விடுவோம் என்றால், அது பெரும் ஆபத்தாக முடியும். இப்பொழுது சூத்திரர்கள் தப ஜெபம் செய்கிறார்கள். இராமாயணத்தை ஆதாரமாகக் கொண்டால், அவர்கள் தலைகளை எல்லாம் வெட்டவேண்டும். இந்தச் சூத்திரன் தவம் செய்வதால், ஒரு பிராமணப் பையன் இறந்தான். இந்தச் சூத்திரச் சம்புகனைக் கொல்லுவது பாவமுமில்லை. பிராமணச் சிறுவனும் உயிர்பெற்று எழுகிறான் என்று சம்புகன் தலையை இராமர் வெட்டி, வெட்டின கையைப் புகழ்கிறார். இராமாயணத்தைக் கேளுங்களப்பா கேளுங்கள்.

"ஹே! ஹஸ்த தக்ஷிணிமருதஸ்ய சிசோர்த் விஜஸ்ய ஜீவா தலே விஸ்ருஜ சூத்ரமுனௌக் ருபாரணம்; ராமஸ்ய காத்ரமஸி."

ஓ வலது கையே! இறந்துபோன பிராமணச் சிறுவன் மறுபடியும் உயிர்பெற்றெழுவதற்கு, இந்தச் சூத்திரத் துறவியை கொல்லுவதே மருந்தாகையால் கூசாமல் வெட்டிவிடு! நீ இராமனது அங்கங்களில் ஒன்றன்றோ? என்ற இராமாயணம் பெரியஆபத்து. கீதையை வைத்துவிடலாமா? ஜாதிகூடாதுஎன்கிற இந்தச் சமயத்தில் வருணாஸ்ரம தருமத்தையுடைய கீதையும், வேதாந்தம். பையன்களுக்கு வேதாந்தமும் கூடாது.

"பிராஹ்மணோமமதேவதா" பிராமணனே என்குல தெய்வம் என்று கிருஷ்ணபகவானே சொல்லியிருக்கையில் அதைப் பாடமாகவைத்து, கிருஷ்ணன் சொன்னதை எல்லாப் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்தால், இந்துக் கலாச்சாரத்திற்கும், இந்து தருமத்திற்கும் விரோதமில்லை. பிராமண மனமும் குளிரும்! தயவுமுண்டாகும்!

---

**இழிவையுணர்ந்த அறிகுறியே கருப்புடை!**

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கும் சம்பந்தமில்லாமலே செய்தார். கைகேயிக்கும் என்னை நல்ல பிள்ளையாகவே நடந்து அவளது பூரண அன்பையும், நம்பிக்கையையும் பெறும்படியும், கைகேயிக்குப் பரதன் ஞாபகமே வராமல் இருக்கும்படி நடந்து கொள்ளவும் செய்தார். என்னமோ ஒருவராலும் செய்ய முடியாததான, அவ்வளவு தந்திரமாகவும் முன்னேற்பாடாகவும் செய்த இந்தக் காரியம், கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமல் போனது போல் ஆகிவிட்டது. இந்தக் கைகேயி கடைசி நிமிஷத்தில் அப்படிச் செய்து விட்டாள். என் செய்வது? எனக்கு இப்போது எவ்வளவு அவமானம்?

சீதை:— நாதா! இவ்வளவு கெட்டிக்காரத்தனமாகவும், பஞ்சதந்திரமாகவும், இரகசியமாகவும் நடந்த சங்கதி எப்படி கைகேயிக்கு நல்ல சமயத்தில் தெரிந்து விட்டது?

இராமன்:— அதுதான் எனது பொல்லாத காலம். கைகேயினுடைய வீட்டில் மந்தரை என்கிற கிழவி வேலைக்காரி இருக்கிறாள். அவள் என் தகப்பனாருக்கும் கைகேயிக்கும் கலியாணம் ஆகிக், கைகேயி அயோத்திக்கு வரும்போது கைகேயியோடு கூடவே வேலைக்காரியாக வந்தவள். அவளுக்குக் கலியாண காலத்தில் நடந்த பேச்சு வார்த்தைகள் எல்லாம் தெரியும். அந்தப் பேச்சு வார்த்தையின்படி அயோத்தி பரதனுக்குச் சொந்தமானது என்பதை அவள் உணர்ந்தவள். நேற்று நம் வீட்டு வேலைக்காரி, கைகேயி வீட்டுக்குப் போன போது பட்டாபிஷேகச் சங்கதியைச் சொல்லி விட்டாள். மந்தரை உடனே கைகேயிக்குச் சொல்லி அவள் புத்தியைக் கெடுத்து விட்டாள். அதனால் கைகேயி ஆத்திரப்பட்டு என்னை நாட்டிலேயே வைக்கக் கூடாது என்று முடிவு செய்து விட்டாள். காரணம் நான் இங்கிருந்தால் பரதனுக்கு ஏதாவது கேடு செய்வேன் என்கின்ற பயந்தான்.

சீதை:— அடடா! இந்த வேலைக்காரி முண்டை கூனியாலா இப்படி நேர்ந்தது! இதற்கு வேறு தந்திரம் ஒன்றும் இல்லையா?

இராமன்:— இப்போதைக்கு ஒரு மார்க்கமும் இல்லை. நான் சரி என்று ஒப்புக் கொண்டு காட்டிற்குப் போக வேண்டியதுதான். பிறகு சரிப்படுத்திக் கொள்ளலாம்.

சீதை:— பிறகு எப்படிச் சரிப்படுத்திக் கொள்ள முடியும்? தாங்கள் சென்றவுடன் பரதனுக்குப் பட்டம் ஆகிவிடுமே!

இராமன்:— எப்படி ஆனாலும் சரி! பரதன் ஒரு ஏமாளி. அவனைச் சுலபத்தில் ஏமாற்றி விடலாம். நீமாத்திரம் நான் சொன்னபடி கேட்டால் போதும்.

சீதை:— நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள். உடனே செய்கிறேன்.

இராமன்:— நீ செய்ய வேண்டியது என்னவென்றால், நான் காட்டிற்குப் போனவுடன் பரதன் இங்கு வரவழைக்கப்படுவான். அவனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கலாம். நீ அவனுக்குத் தக்கபடி நடந்து நீ அவனைக் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும். அவனை நீ சொல்லுகிறபடி ஆடும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்து விட்டால் பிறகு அவனாலேயே என்னை அழைத்துக் கொள்ளும்படி செய்யலாம். பிறகு நீதான் இராணி. உன்கையில்தான் அயோத்தி. ஆனால் காரியம் மிகக் கெட்டிக்காரத்தனமாகச் செய்ய வேண்டும். செய்வாயோ?

சீதை:— நாதா! இது என்ன ஆகக்கூடிய காரியமா? பரதனை இந்த விதமாக ஏமாற்றவே முடியாது. அதுவும் என்னால் முடியவே முடியாது.

இராமன்:— சீதாய்! அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்?

சீதா:— நாதா! அது என்ன காரணமோ, பரதனுக்கு என்னைக் கண்டால் பிடிப்பதேயில்லை. என்மேல் அவனுக்கு நமது திருமணம் ஆன காலத்திலேயே வெறுப்பு. என்னிடம் பேசுவதில்லை. கொழுந்தன் ஆயிற்றே என்று நானாகச் சிரித்தால், விளையாடினால் சிறிதுகூட லட்சியம் செய்வதில்லை.

இராமன்:— ஆம். அவன் உன்னைக் கேவலமாகத்தான் மதித்து வந்திருக்கிறான். இருந்தாலும் அந்தக் காலத்தில் அவன் சின்னப் பையன். இப்போது சரியான ஆளாக ஆகியிருப்பான். ஆதலால் அவனை நீ சரிப்படுத்தி விடலாம். எப்படி எனில் என்னைப் பற்றிக் கவலைப் படுபவள்போல் காட்டிக் கொள்ளாதே! என்னை அவன் முன் புகழ்ந்து பேசாதே! என்னிடம் வெறுப்புள்ளவள் போல் காட்டிக் கொள்! எப்போதும் அவன் பக்கத்திலேயே இரு! சரிப்பட்டு விடுவான். பிறகு நமதுதான் இராஜ்ஜியம்.

சீதை:— நாதா! அந்தக்காரியம் என்னால் முடியாது. என்னைக் கண்டாலே மகாக்கசப்புப் போல் வெறுக்கிறான். அவனை நான் எப்படிச் சரிப்படுத்த முடியும். அதில் எனக்கு நம்பிக்கையில்லை! அது மாத்திரம் செல்லாது அவனிடம்! இந்தவழி வேண்டாம்! பெண்டாட்டியைக் கெடுத்து இராஜ்ஜிய செல்வாக்குப் பெற்றாய் என்கின்ற பேர் வேண்டாம்! அப்படி அவனைச் சரிப்படுத்தவும் முடியாது. வீணாகப் பேர் கெட்டு விடும். வேறு ஏதாவது வழிபாருங்கள்.

இராமன்:— வேறு வழி என்ன? பேசாமல் தகப்பனார் சொல்லுக்குக் கட்டுப் பட்டுக் காட்டுக்குப் போவது போல் சொல்லிக் கொண்டு காட்டுக்குப்போக வேண்டியது தான். மற்றப்படி வேறு ஏதாவது தகராறு செய்வதானால் அது முடிவதாயிருந்தாலும் மிகவும் பழிக்கு இடமாகிவிடும். அதாவது இலட்சுமணன் சொன்னபடி என் தகப்பனாரைச் சிறையில் வைத்துவிட்டு விரோதிகளை நாசம் செய்து இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக்கொள்ளலாம். ஆனால் அதிலிருந்து உண்மை விஷயம் அதாவது இந்த இராஜ்ஜியம் பரதனுடையது; அவனை மோசம்செய்து இப்படிப்பட்ட காரியத்தால் நான் கைப்பற்றி விட்டேன் என்பது வெளியானால் குடிகள் மதிக்க மாட்டார்கள். அதோடு எதிர்ப்பாகவும் ஆகிவிடுவார்கள். கேகய நாட்டுடன் போர் ஏற்படும். உலகம் என்னை மிக மிகக் கேவலமாக மதிக்கும். இவ்வளவும் தவிர மற்ற தம்பிமார்களும், தங்களுக்.

# இதைத் தடுப்பவர் மறுப்பவர் யார்? யோசி!

கும் பங்குவேண்டுமென்று கலகத்துக்குத் தொடங்கி விடுவார்கள். இப்போதே லட்சுமணனுக்கு இந்தப் பூமியை ஆளவேண்டுமென்கிற ஆசை இருக்கிறது. அவன் இப்போதே என்னைக்கூடமீறி இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக் கொள்ளத் துடிக்கிறான். ஆகலால் இப்போதைக்கு நான் பேசாமல் காட்டுக்குப்போகவேண்டியது தான். பிறகு எப்படியும் வகை செய்து கொள்ளலாம் என்று எனக்குத் தைரியம் இருக்கிறது. நான் காட்டுக்குப் போன பின்பு எப்படியும் பரதன் என்னிடம் வருவான். அவன் சுத்தப் பயித்தியக்காரன். அவனைச் சுலபத்தில் ஏமாற்றி விடலாம்.

**சீதை:**— சரி தாங்கள் காட்டுக்குப் போகிறீர்கள். அப்புறம் என் சங்கதி என்ன?

**இராமன்:**— உன் சங்கதி எனக்குச் சிறிது சந்தேகமாகத் தான் இருக்கிறது.

**சீதை:**— என்னைப் பற்றித் தங்களுக்குச் சந்தேகம் என்ன?

**இராமன்:**—"என்ன சந்தேகம்" என்றால் கைகேயி உன்னை இங்கு விட்டு விட்டுப் போகச் சம்மதிக்கிறாளோ, அல்லது நீயும் காட்டுக்குப் போய்த்தான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்துவாளோ என்னமோ தெரியவில்லை. அது தெரிந்த பிறகுதான் உன் விஷயம் முடிவு செய்யவேண்டும். என்னுடைய எண்ணம் என்னவென்றால் கைகேயி ஆட்சேபிக்காவிட்டால் நீ இங்கிருந்து என் தாயாரைக் கவனித்துக் கொண்டு இருக்க வேண்டும். பரதனுக்குத் திருப்தியாய் நடக்க வேண்டும். மற்றும் வேறு காரியங்கள் என்ன நடக்கின்றன என்பதையும் கவனித்துக் கொள்ளவேண்டும் என்பதுதான்.

**சீதை:**—நாதா! கைகேயியால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை எனக்கும் கொடுக்கப்பட்டதுதான். நானும் கூடவே வருகிறேன்.

**இராமன்:**—சரி. நீயும் காட்டிற்குப் புறப்படத் தயாராகுக! அங்கு இந்த அலங்காரத்துடன், நகை துணி மணிகளுடன் செல்லக் கூடாது. அவற்றை எல்லாம் பிராமணர்களுக்குக் கொடுத்துவிடு! வீட்டில் வைக்க வேண்டாம்! கைகேயி ஏன் அனுபவிக்கவேண்டும்? அவைகளை எல்லாம் பிராமணாளுக்குக் கொடுத்தால் அவர்கள் நாம் மறுபடியும் இங்குவரத் தந்திரங்களைச் செய்வார்கள்.

**சீதை:**— (மகிழ்ச்சியோடு) அப்படியே செய்கிறேன்.

காட்சி முடிகிறது.

## காட்சி 27.

அனேக பிராமணர்கள் கூட்டம். சிதை அந்தப் பிராமணர்களை வணங்கி நகைகள், பண்டங்கள் ஆகியவைகளைக் கொடுக்கிறாள்.

காட்சி முடிகிறது.

# எனது கனவு!

[எம். கந்தசாமி]

★

நான்:- வாருங்கள்! வாருங்கள்! யாவரும் வாருங்கள்! தங்கள் வரவு நல்வரவாகுக! என்று என்முன்னால் ஆனந்த சாகரத்தில் மூழ்கின அண்ணல்கள்போல் தென்பட்ட கூட்டத்தாரை வரவேற்றேன்.

[அக்கூட்டத்தில் அய்க்கியப்பட்ட தோழர்கள்:: அந்தர அணுக்குண்டு வீசும் அடுக்குச்சொல் அண்ணா, இந்தியெதிர்ப்பியக்கத்துக்குப் பின் இனிது பிரிந்த திருச்சி கி. ஆ. பெ. விஸ்வநாதம், சோமசுந்தர பாரதியார், மதுரை சவுந்தர ராஜனார், டார்ப்பிடோ ஜனார்த்தனம், அன்பழகன், சென்னை சி. டி. டி. அரசு, பெரியாரது வார்த்தைகளைப் பேரிடியாக்கும் நடராஜன், அழகிரி அவர்கள் முதலானோர்]

அண்ணா:- எல்லாரின் சார்பாக தோழரது வரவேற்பை யேற்றுக் கொள்ளச் சித்தம்.

கி. ஆ. பெ. வி:- தோழரைக் காணுமிடத்து இங்கு வந்த யாவரும் ஒன்று கூடின இந்நாளை, கூடமுடியாது என்று குக்கல்கள் சொன்னதைப் பொய்யாக்கின இந்நாளை வரவேற்று, அதன்பின் தோழரின் வரவேற்பைஎல்லாத்தோழர்களின் சார்பாக நன்றி முறையில் பாராட்டுகிறேன்.

நான்: எனது வரவேற்பைப் பாராட்டுதல் செய்த உங்களின் முன், நமது கருப்புச்சட்டை அமைப்பைத் தடை செய்து, உங்களை ஒன்றுபட்ட தொண்டாற்றும் பணியில் ஈடுபட உதவி செய்த நமது காருண்ய சர்க்காருக்கு நமது வணக்கம்; உங்கள் யாவருக்கும் எனது அடிபணிந்த வணக்கத்துடன் உங்களது ஒருமித்த பண்புத் தொண்டுக்கு இணக்கமுங்கூட.

சோ. சு. பா: நாங்கள் சேர்ந்த இன்று முதற்கொண்டு—சேர்ந்தது பெரியாரின் வேண்டுகோளாலல்ல, தமிழைக் காக்க இந்தியை எதிர்த்த உணர்ச்சியாலும் நம் நாட்டையடைய நம்மின உணர்ச்சியாலுமே ஆகும்.

நான்: நம் தலைவர் பெரியார்! நம் திராவிட மக்கள் யாவருக்கும் தலைவரே யாவர். சில சுயநலமிகள் தற்பொழுது அவரை எதிர்த்தாலும், எதிர்காலத்தில் அவரையே தலைவராகச் சிறந்த உணர்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுவர் என்பது உறுதி.

ஜனார்த்தனம்: நம் நாட்டு லெனின், நயவஞ்சக உலகிலிருந்து கோட்ஸேக்களால் பிரிக்கப்படினும் அவரது சக்தி, தன்மை, போக்கு, உறுதி, வைராக்கியம் முதலிய பல சக்திகளும் எல்லா இடங்களிலும் (இல்லா இடமில்லாமல்) நிறைகொள்ளும். இப்பொழுது ஒருவராயிருக்கும் பெரியார், அப்பொழுது பார்த்த பக்கமெல்லாம் பல பெரியார்களாகத்தோன்றுவார், பல தாளமுத்து நடராஜன்களுடன்.

நான்: எதிர்காலத் திட்டம் தீவிரப் போராட்டமா? அல்லது...........

அன்பழகன்: தீவிரமென்று கனவிலும் நினைக்காதீர்! என் தோழரே! அவ்வார்த்தையை அகத்தில் நினைத்தாலும் நம் தலைவரது 'சாத்மீக' ஆணையை மீறினவராவோம். எதிர்காலத் திட்டம் சாத்மீகப் போராட்டந்தான். ஆனால்.........

நான்: ஆனால்? என்ன? சாத்மீகம் பூராவாக இல்லையா?

அழகிரி: எப்பொழுதும் சாத்மீகம்! மதுரைப் பந்தல் தீயுடன் காட்சிதந்த போது நாம்இருந்தமாதிரி, சேலத்தில் காந்திஜயந்தியன்று நம்கண்களை காந்திக்குக் காணிக்கையாகச் செலுத்தின போது இருந்த மாதிரி. சாந்த மனமும் கோபத்தால் தீண்டப்பட்டு கோபாக்கினியைக் கக்கும் சமயத்திலும்கூட சாத்மீகந்தான் நம்ஆயுதம். அந்த அருமையான ஒப்பற்ற ஆயுதமொன்று தான் நம் வெற்றிப்படை.

நான்:- நம் நாட்டை நாம் பெறுவோமா, அல்லது அடைவோமா?

சி. டி. டி. அ:- பெறுவோமா அல்ல! அடைவோம். உறுதியாக அடைவோம். பூரண சுதந்தரத்தை, பூரண சுதந்தர நாட்டை நாம் அடைவோம், பெரியார் வழியில் மட்டும் சென்றால்.

நான்:- நாம் யாவரும், அல்லது பல பேர் (மொத்தத்தில் அதிகமானபேர்) இனஒற்றுமை, இனக்கட்டுப்பாடு, இன உணர்ச்சி, இனவெற்றிப்பாதை முதலியவைகளில் கிஞ்சிற்றும் மாறாது தவறாது அடைந்தால்தானே!

நடராஜன்:- நல்ல பாம்பைக் கண்டிரண்டதோன் யாவரும் அதை அடச்

கப் பார்ப்பார்கள்.

நான்:- நாம் நல்லபாம்பைப் 'போன்றவர்களா?

சவு. ரா:- நாம் நல்ல பாம்பைப் போன்றவர்களல்ல; நீர்ப் பாம்பு போன்றவர்கள். ஆனால் அவர்களுக்குத் தைரியமில்லாது நயவஞ்சகத் தந்திரங்களை ஆயுதமாக வைத்திருக்கும் உஞ்சிவிர்த்தி வர்க்கத்தாருக்கு, பார்த்தவுடன் பயப்பட்ட இனத்தார்க்கு —பயத்தால் மனநிலை தடுமாறின நிலையில் தோன்றும் நீர்ப்பாம்புகள் எல்லாம் நல்ல பாம்புகளாகவே தோன்றும். ஆதலால் அவர்கள் மிரண்ட நிலையில் தான் அடக்க ஆர்வம் கொள்வர்: நம்மை அடக்கம் செய்யவும் ஆர்வம் கொள்வர், பெரியார்காந்தியடிகளையே அடக்கம் செய்த மமதையால்.

நான்: நயவஞ்சகத்துக்கும், துரோக நடவடிக்கைகளுக்கும் அழிவும் கால எல்லையும் இல்லையல்லவா?

அண்ணா: நயவஞ்சக உலகுக்கும் துரோக நடவடிக்கையெடுப்பவர்க்கும் அழிவுண்டு, நாம் யாவரும் பூர்ண ஒற்றுமையுடன் அன்பு என்னும் கடவுளைக்கொண்டால். அழிவுண்டு, நாம் யாவரும் சிறிது சிறிது அபிப்பிராய பேதங்கள் இருப்பினும் எதிர்காலத் திட்டங்களைத் திட்டமாக ஒழுங்கான அய்க்கியத்துடன் நடாத்தினால்; நயவஞ்சகர்கள் நம் மன்னிப்பைக்கோரும் நாள் வந்தே தீரும், நாம் கட்டுப்பாடுடன் சாத்மீகப்போரை நடத்தினால்.

நான்: இன்று நம்தலைவர் பெரியார் அவர்கள் இருக்கும் இடமோ?

அண்ணா: அவர் எங்கிருப்பின் என்ன? வேலூர் விரும்பி வைத்திருக்கலாம். பெல்லாரி பெருமை கொண்டிருக்கலாம். இருக்கட்டுமே! அவர் ஈண்டு தோழரது புறக்கண்ணுக்குத் தோன்றாது அகக் கண்ணில் தோன்றுவதைப்பாரீர். சிறிது புறக்கண் பார்வையை யகற்றி (கண்ணைமூடி) சிந்தித்துப் பார்ப்பீர். ஈண்டு இவ்வளவு தோழர்கள் நாக்களிலிருந்து எழும்பிய நாதங்கள் பெரியாரது நாதத் துவலைகள் என்பதையறிவீர். அவரொருவர் (ஈரோட்டில்) உதிக்காதிருப்பின், இவ்வளவு தோழர்களும் ஒன்று கூடி ஈண்டு இப்பொழுது இவ்விதமான வார்த்தைகளைச் சொல்லச் சமயம் வாய்க்காது, சொல்லவும் முடியாது. சொல்ல எண்ணங்களும் தோன்றா. இஃதைத்தான் அப்புரட்டர்கள்-அவதார புருடர்களின் சீடர்களும் பக்தர்களும் ஜகத்ஜோதியாய் விளங்குகிறார் என்றறைவர்.

நான்: (அப்பொழுதுதான் வந்த அன்னீர் செல்வம் அவர்களைநோக்கி) தலைவருக்கு என் வணக்கம். 'இவ்வளவுகாலம் தங்களைப் புரட்டர் மறைத்து விட்டனர்' என்று நினைத்தது தவறுஎன்று புலப்படுத்துவான் போல் புறக்கண் பார்வைக்கு அகப்பட்டதற்கு என் வணக்கம், திராவிடர்களின் சார்பாக.

பன். செல்.:- தோழரே! இப்பொழுதுதான் ஆகாய விமானத்தில் சென்னையையடைந்தேன். சங்கதி தெரிய ஈண்டு வந்தேன்.

நான்:-'மறைந்தவர் தோன்றுவதும், இறந்தவர் ஜோதியாய்க் கலப்பதும், உண்மைதான்' என்ற உண்மை இப்பொழுதுதான் புலன் ஆயிற்று.

திரு. வி. க.:- (அப்பொழுதுதான் வந்து) வணக்கம்! யாவர்க்கும்.

அண்ணா:- கூடாத கூட்டம் கூடினது. காணாத நாள் கண்டது, கிடைத்தற்கரிய சந்தர்ப்பம் கிடைத்தது, ஆராய்ச்சிக்குக் கொணர முடியா ஆராய்ச்சி நுணுக்கங்களின் திட்டம் அமைந்தது. இந்நாள் நன்னாள்!

நான்:- இப்புகழுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் உரியவர்களே! ஆனால் அப்புகழுக்கு ஆளாகாதவாறு நீங்கள் ஒவ்வொருவரும் அனாதைத் தன்மையைப் பெறுதலே நல்லது. அனாதை நிலை தான் ஆராய்ச்சிக்கலை ஆரம்ப இடம், அனாதைத்தன்மைதான் அநீதியற்றோர் ஆசையோடு நோக்குமிடம்.

அண்ணா:- உண்மைதான், எப்பொழுதும் மனம் தந்நிலையுடனிருந்தால் மட்டும்.

திரு. வி. க.:- நாட்டை, சுதந்தர நாட்டை, பூரண சுதந்தர நாட்டையடைந்த பின்னர்ப் பேசும் தத்துவ விளக்கம், கவலையற்று இருக்கும் நிலையில் பேசும் ஆனந்தப் போக்கு, இப்பொழுது வேண்டாம்.

அண்ணா:- அணை கட்டுவது வெள்ளம் வருமுன்தான். ஆனால் சதா வெள்ளம் வற்றாமல் வந்து கொண்டிருந்தால் என் செய்வது. அணை கட்ட யோசனை செய்வதா? அன்றி 'வீண் யோசனை' என்றியம்பிப் பிரிவதா? அன்றிப் பலபேர் மடிந்திடினும் அணைக்கற்களாகக் குறித்த இடத்தில் ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்து வெள்ளத்தைத் தடுப்பதா?

திரு. வி. க.:- தியாகத்தீ என்பது தியாக புருடர்களுக்கு, தன்னுயிரினும் சிறந்த தன் மானத்தைக் காப்பாற்ற உறுதிகொள்ளும் மக்களுக்கு அற்பம் தான். எப்பொழுதும் அற்பம்தான், வெற்றிகாணும் வரை.

அழகிரி:- ஆம் வெற்றிக்கொடி அதோ தெரிகிறது. அதிக தூரத்தில்லை. நாம் 'தியாகம்' என்னும் நதியின் இக்கரையிலிருக்கிறோம். சூழ்ச்சி, திறமையின்மை முதலிய மலைக்கரடுகளுடன் அடக்குமுறை என்னும் வெள்ளம் வந்துகொண்டிருக்கிறது. உறுதி, ஒற்றுமை, கட்டுப்பாடு முதலிய அணைக்கற்களால் போராட்டம் என்னும் அணையைக்கட்டி, தியாகம் என்னும் நதியைக் கடந்து அக்கரையாக அக்கரை சென்றால் நம் நாட்டின் பூரண சுதந்தரக் கொடியின் கீழ் நாமிருப்போம். வாரீர் என்று அழைக்கிறேன் வாலிப வீரரை!

நான்: நாம் செய்யப்போகும் தியாகம் நமக்கு உறுதியாய்ப் பயனளிக்குமா? இல்லையேல்!...........

நடரா:- பேடித்தன்மை வாய்ந்த தோழா! ''நம் தியாகம் நமக்குப் பலனளிக்கா'' என்ற பிற்போக்கான எண்ணம் ''நம்தியாகம் நமக்கொரு வேளை பயனளிக்காமல் போய்விடுமா'' என்ற அய்யவினா எழுவதற்கு, உன் உடம்யில் ஓடுவது திராவிட வீர ரத்தமா, அன்றி உஞ்சிவிர்த்தி வர்க்கத்தாரின் உணர்வற்ற ரத்தமா! உம்மைப்போன்ற அய்ந்தாம் பசலிகள் நாட்டில் பொது மக்களாகவும் சர்க்காரின் உத்யோகங்களிலும் இருப்பதால் தான் நாம்போகும் வெற்றிப் பாதை கரடுமுரடாயிருக்கின்றன. நம் நாட்டாட்சி காலத்தில் இப்போர்க்கொத்த காயங்கள்ஒன்றும் இருக்காதென்ற எண்ணம் திடமாக வைத்துக்கொள்ளும்.

நான்:- ஆஹா! நான் கோழையல்ல! கோழை யென்று பட்டம் வாங்கப் பிறந்தவன் நானல்ல, நீர் எனது சத்துருவா அல்லது சத்துரு போன்று தோன்றிச் சீர்திருத்தும் மித்துருவா! (பெரிய சத்தத்துடன்) ஓ! பெரியோரே! நீங்க ளெல்லாரும் கேளீர்! நான் கோழையாம்! நான் (கோபாவேசத்துடன்) பேடியாம்! மானம் போயிடினும் உயிர் பெரிதென்றெண்ணும் கோட்ஸேயின் கூட்டமல்ல என்று எப்பொழுதும் நினைப்பீர்! தகாத செயலைச் செய்தேனும் காரியத்தைச் சாதிக்கும் நயவஞ்சக உஞ்சி விர்த்திக் கூட்டத்தில் பிறந்தவனல்ல நான்!

என்பெற்றோர்:- (என்கையைப் பிடித்து என்னைத் தட்டி யெழுப்பி) என்ன! என்ன ஏன் உளறுகிறாய். என்ன காரணம்.

நான் விழித்துப் பார்த்து, என் பெற்றோரை மட்டும் பார்த்தேன் அவர்களது பரிதாப முகத்துடன்.

எல்லோரும் (கனவில் தோன்றின யாவரும்) ஜோதியாய்க் கலந்து விட்டனர். (மறைந்து விட்டனர் புறக்கண் பார்வையிலிருந்து)

★

## தோற்றம்.

அன்னவாசல் தோழர் ஜி. செபஸ்தியான் துணைவி குழந்தை தெரேசுக்கு 27-2-48ம் நாள் பெண் மகவு பிறந்து மாதரசி எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக குடி அரசுக்கு அனுப்பிய ரூபாய் ஒன்றையும் வரப்பெற்றோம்.

## வகுப்புத் துவேஷத்தை ஒழிக்க

## அக்கிரகாரஸ்தானை அழி!

# பார்வதியின் குறைகள்.

[இந்திரசித்து]

★

கண்ணே! கலங்காதே. காரணத்தைக் கூறாது கண்ணீர் விட்டால் நான் எப்படி அறிய முடியும்? என்ன நடந்தது? என்று கூறிப் பரமசிவன் கட்டிலில் கிடந்த கைக் குட்டையை எடுத்துப் பார்வதியின் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தார்.

பார்வதிக்கு விம்மல் அதிகமாயிற்றே தவிரப் பதில் கூறமுடியவில்லை.

கண்மணி! நீ கலங்குவதைக் காண என்மனம் எவ்வளவோ வேதனை அடைகிறது. மக்களின் மாதாவாகிய நீயா இவ்வாறு கலங்குவது. நீ கலங்குவதற்குக் காரணமாய் இருந்தவர்களைக் கூறு. இப்பொழுதே நிர்மூலமாக்குகின்றேன்.

சொல்வதற்கு "நா" கூசுகிறது. மயிர்கள் சிலிர்க்கின்றன. நான் என்னவென்று கூறுவேன்? பெண்ணாகிய நான் அவைகளை எப்படிக் கூறுவது?

தொட்டுத்தாலி கட்டிய கணவனிடம் கூடவா கூச்சப்படுவது? வெட்கத்தைவிட்டு விவரமாகக்கூறு.

நானும் அவ்வாறுதான் எண்ணியிருந்தேன். தாங்கள்தான் எனது கணவன் எனக் களிப்பெய்தி இருந்தேன். மக்களின் மாதா என்று மனமகிழ்ச்சி அடைந்திருந்தேன். ஆனால் அதே மக்களால் நான் மானபங்கம் அடைந்து வருவதை இதுவரையில் அறியவில்லை.

என்ன மானபங்கம் செய்யப்பட்டாயா? மறுபடியும் அசுரர்கள் தொல்லையா—விவரத்தைக் கூறாது வேறு ஏதேதோ கூறுகிறாயே.

நேற்றுப் பூலோகம் சென்றிருந்தேன். அங்கு மக்கள் தங்களையும் என்னையும் மானபங்கப்படுத்தி வருவதை கண்ணாரக் கண்டேன். என்னைப்போல ஓர் உருவம் கல்லிலே செதுக்கி உள்ளனர். ஆடவர்கள் பலபேர் முன்னிலையில் என்னை (கல்லை) அய்யர் ஒருவன் தொட்டு மாலையிடுகிறான். எனது ஆடைகளை அத்தனை பேர் எதிரிலேயே களைந்துவிட்டுத் தொடாத இடங்களிலெல்லாம் எண்ணெய் தடவுகிறான். அதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றனர்.

அற்பப் பயல்கள்!! பகுத்தறிவு இல்லாத நாய்! இப்பொழுது எல்லாம் சினிமா, ஹோட்டல் முதலிய இடங்களிற் கூட பெண்களுக்கெனத் தனியாக இடம் அமைத்து, பெண்களைக் கொண்டே "சப்ளை" செய்கின்றனர். அறிவற்ற நாய்கள் பெண்ணுக்கு ஆண் அலங்காரம் செய்வதை அனுமதிக்கின்றார்களா?

நாதா! அது மட்டுமல்ல. ஒரு கல்லின் அடிப் பாகத்தை யோனியை (பெண்குறி) ப்போலவும், மேல் பாகத்தை லிங்கத்தைப் போலவும் (ஆண்குறி) செதுக்கி வைத்துள்ளனர். அது தான் தாங்களாம்.

என்ன?......என்னையா இவ்வளவு இழிவு படுத்தியுள்ளனர்? என்ன பார்வதி நீ கூறுவது உண்மைதானா? அல்லது விளையாடுகிறாயா?

ஸ்வாமி! நான் கூறுவது அவ்வளவும் உண்மை. அந்த ஆபாசமான உருவத்திற்குத் தக்கவாறு ஓர் ஆபாசமான கதையையும் கட்டியுள்ளனர். ஒரு சமயம் தாங்கள் தாருகாவனத்தில் வாழ்ந்த ரிஷி பத்தினிகளின் கற்பை அழித்துவிட்டீர்களாம். அதைக்கண்டு வெகுண்ட ரிஷிகள் தங்களது லிங்கம் (ஆண்குறி) அறுந்து விழும்படி சாபம் இட்டனராம். அதுகீழே விழும் சமயம் மகாவிஷ்ணு யோனியாக மாறி அதைத் தாங்கினாராம். அதன் ஞாபகார்த்தம் தானாம் அந்த உருவம்.

காமப்பிசாசுகள்! வெறியர்கள்! என்னையும் அவ்வாறு எண்ணினார்களா? பேய்கள்! மானமில்லாத மடையர்கள்!-

அதுமட்டுமா? வருஷா வருஷா வருஷம் தங்களுக்கும் எனக்கும் திருமணம் செய்கின்றனர். தங்கள் பெயரைக்கூறி மணி அடிக்கும் அய்யரே எனக்குத் தாலி கட்டுகிறான்? என்று கூறி பார்வதி மறுபடியும் அழ ஆரம்பித்தாள்.

அற்பப்பதர்கள்! அவ்வளவு ஆணவமா? அழித்து விடுகிறேன். எடு! சூலாயுதத்தை.

(அந்தச் சமயத்தில் நாரதர் அங்கே வருகிறார்)

தேவ தேவா! நமஸ்கரிக்கின்றேன்.

என்ன நாரதரே! பூலோகத்தில் மக்களின் மடத்தனம் அளவுக்கு மிஞ்சி விட்டதாமே? அதைப்பற்றி நீர் என் இதுவரை ஓர் வார்த்தைகூடக் கூறவில்லை? என்று கோபத்துடன் வினவினார் பரமசிவன்.

ஸ்வாமி! சாந்த சொரூபியாகிய தாங்கள் இவ்விதம் கோபம் கொள்ளலாமா? இதோ கூறுகிறேன் அமருங்கள்! பூலோகத்தில் இந்தியா என்ற உபகண்டத்தில், அதுவும் முக்கியமாக தமிழகத்தில் தான் தாங்கள் கூறுவது மாதிரி நடைபெற்று வருகிறது............

என்ன தமிழர்களா? திராவிட இனத்தவர்களா? இவ்விதச் செய்கைகளுக்குத் துணிந்தார்கள்.

அதற்கு அவர்கள் காரணம்இல்லை. ஆடுமாடுகள் ஓட்டிக்கொண்டு பிழைக்க வந்த கூட்டம், அவர்களை அந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டது.

யார்? ஆரியர்களா?

ஆம். அவர்களே தான் தங்களையும், தேவியார் அவர்களையும் இழிவுபடுத்திப் பல கதைகள் அமைத்தும் சிலைகள் செதுக்கியும் வந்துள்ளார்கள். அதைத் திராவிடர்கள் உண்மையென நம்பி ஏமாறுகிறார்கள். தமிழர்களுக்கு தன்மான உணர்ச்சி ஏற்படாவண்ணம், அவர்களைப் பல சாதிகளாகப் பிரித்து அவர்களை அவர்களது இனத்தின் பெயரை அறியா வண்ணம் அவ்வளவு சூதுகள் செய்துள்ளனர். தமிழகம் சென்று தனி ஒருவனைக்கண்டு உனது இனம் என்ன? என்றால் அவன் என். பி. என்பான்.

என்ன? என். பி. யா? அது என்ன?

என்.பி. என்றால் (Non-Brahmin) பிராமணர் அல்லாதவர் என்று பொருள். எவனும் தன்னைத் திராவிடன்—திராவிட இனம் என்று கூற மாட்டான். பிராமணன் அல்லாதவன் என்று அழைக்கின்றனரே, தன்னுடைய இனப் பெயர் என்ன என்று எவனும் சிந்தித்ததில்லை. பள்ளியிலிருந்து சர்க்கார் காரியாலயம் வரை பிராமணன் அல்லாதவன் என்றுதான் அழைக்கின்றனர். ஆரியர் அவரை ஏமாற்றுவதுடன் நில்லாமல் தங்களிடமும் வாலை ஆட்டுகின்றனர்.

ஆ! அப்படியா. முப்புரம் எரித்த எனக்கு அந்த அக்கிரகாரத்தை அக்னிமயமாக்குவது பெரிய காரியமா? இதோபார்! என்று நெற்றிக் கண்ணைத் திறக்க ஆயத்தமானார் சிவன்.

"பிரபோ! ஒரு வேண்டுகோள்! ஆரியர்களைத் தாங்கள் அழித்துவிட்டால் தமிழர்களுக்குத் தன்மான உணர்ச்சி வராது. தமிழர்களுக்குத் தன்மான உணர்ச்சி வந்து அவர்களே ஆரியத்தை அகற்றுவதுதான் முறை. அதற்கான காலம் அதிக தூரம் இல்லை. தமிழர்கள் தன்மான உணர்ச்சி பெற்றுக் கொண்டு வருகின்றனர். இன்னும் ஒருசில காலத்தில் தங்கள் எண்ணம் தானே ஈடேறும். அப்பொழுது ஆரியர்கள் ஏமாற்றுந் தொழிலை விட்டுச் சாதாரண மனிதர்களாக மாறுவார்கள்." மூடநம்பிக்கை ஒழிக்கப்படும் என்றுகூறினார் நாரதர்.

அதுவும் சரிதான் எனக்கூறிப் படுக்கை அறை சென்றார் பரமசிவன்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE